
# இலங்கைச் சரித்திரம்

ஒல்லாந்தர் காலம்



# இலங்கைச் சரித்திரம்

## ஒல்லாந்தர் காலம் 1658 - 1796.

எழுதியவர் :

மட்டுநகர் - வித்துவான் F. X. C. நடராசா

வெளியிடுபவர்கள்:

கலைமகள் கம்பெனி

124, செட்டியார் தெரு, கொழும்பு-11.

உரிமையுடையது.
முதற் பதிப்பு ஜனவரி 1956

★

விலை ரூ. 1—0—0

# பதிப்புரை

வரலாறு கடந்த காலத்தைக் காட்டும் ஓர் ஓவியம். அந்த ஓவியம் உருப்பெறச் செந்நீரையும், கண்ணீரையும், தசையையும், எலும்பையும், ஈந்த மனிதர்களின் நினைவு, நிகழ்கால வளர்ச்சிக்கும், எதிர்கால ஏற்றத்திற்கும் வழி காட்டும் சிந்தனையைப் பிறப்பிக்கும் சீரிய தன்மையது.

ஆதிக்கம் கொண்ட நாடு அறிவுத் தெளிவு பெறவும், அடிமைப்பட்ட நாடு விடுதலை பெறவும், விடுதலை பெற்ற நாடு முன்னேறிச் செல்லவும், வரலாறு தேவை.

இலங்கைத் தீவின் கடந்த காலம் பொற்காலமா யிருந்தது; பின்னர் அதில் புழுதி படிந்தது; படையெடுப் புப் புயல்கள் பல நிகழ்ந்தன; அயல் கலாச்சார வெள்ளங் கள் எழுந்தன. அத்தனைக்கும் சமாளித்து இன்று எழுந்து நிற்கிறது இலங்கை.

அந்தக் கடந்த காலத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து வெளியிடுகிறோம். முதல் வெளியீடு, "போர்த்துக் கீசர் காலம்—1505-1657" கடந்த ஆண்டு வெளி வந்தது.

இந்த இரண்டாம் பகுதி—ஒல்லாந்தார் காலம்—(1658-1796), அவர் காலத்து வரலாற்றினை விளக்கு கிறது.

இந்நூலாசிரியர், மட்டுநகர் வித்துவான் F. X. C. நடராசா அவர்களைப் பற்றி நாம் அதிகம் கூறத் தேவை யில்லை.

பள்ளி மாணவர் மட்டுமல்லாது, யாவரும் படித் துப் பயன்பெறத் தக்க நூல் இது, என்பது எம் கருத்து.

—பதிப்பாளர்கள்.

# முன்னுரை

இலங்கைச் சரித்திரத்தில் போர்த்துக்கீசர் காலம் நூல் வடிவத்தில் வெளி வந்தது. தொடர்ந்து ஒல்லாந்தர் காலமும் வெளி வருகின்றது. ஆசிரியருக்கும் மாணுக்கருக்கும் பயன்படு முறையில் எழுதப்பட் டிருக்கிறது. இதனையும் பாடசாலைகள் வரவேற்கும் என் பதில் ஐயமில்லை.

இவ்வகை நூல்களை எழுதுவதற்கு எழுத்துப் பயிற்சி வேண்டுமன்றே! ஆசிரிய ராக அமர்ந்து பாடம் படிப்பிப்பது வேறு; படிப்பிப்பனவற்றை நூல் வடிவமாக எழுது வது வேறு; இருபது வருடங்களுக்கு மேல் ஆசிரியனு யிருந்தேன் எனினும் எழுதிப் பழ கும் முயற்சியில் அவ்வளவு தூரம் அனுபவப் படவில்லை. எழுதும் முயற்சி பின் வந்ததே. இதற்குக் காரண கர்த்தா ஒருவர் உளர். 'தினகரன்' ஆசிரியர், என்னுற்ற நண்பர் பண்டிதர். வே. க. ப. நாதன் அவர்கள், 'தினகர'னுக்குக் கட்டுரை எழுதிப் பயிற்சி பெறுமாறு பணித்தனர். அவ்வாறு பெற்ற பயிற்சியின் காரணமாகவே நூல்கள் எழுதத் துணிந்தேன். மேலும் இந்நூலில் வந்துள்ள பல விடயங்கள் 'தினகர'னில் வந்துள்ளன. ஆகவே

**"இலங்கைச் சரித்திரம்-ஒல்லாந்தர் காலம்"** என்னும் இந்நூல் பண்டிதர் **தி. வே. க. ப. நாதன் அவர்களின்** பேரில் வழங்குவதாக"

என்று ஆசித்து அன்னருக்கே இந்நூலை உரிமையாக்குகின்றேன். இன்னும் அவருக்கு எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாணக்கருக்குப் பயன்படு முறையில் எழுதப்பட்டிருக்கும் இந்நூலை ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டு திருத்தக் குறிப்புகள் எழுதி அனுப்பி அடியேனை ஊக்குவிக்குமாறு வேண்டி நிற்கின்றேன்.

53, மத்திய வீதி,<br>மட்டு நகர்,<br>18-10-'55.

**F. X. C. நடராசா.**

# பொருளடக்கம்


I. ஐக்கிய கிழக்கு இந்திய வர்த்தக சங்கம் .... 9

II. II-ம் இராசசிங்கனின் உள்ளூராட்சி முறைகள், வேற்றரசுகளுடன் செய்துகொண்ட தொடர்புகள். .... 15

III. II-ம் இராசசிங்கனின் இறுதிக் காலம், அரசனின் பிரதானிகளுக்கும் ஒல்லாந்தருக்கு மிடையில் ஏற்பட்ட சமரசம். .... 22

IV. II-ம் விமலதரும சூரியன் 1687—1706, ஒல்லாந்தர் மாட்டில் அரசனின் விரோத மனப்பான்மை. .... 29

V. சிறி வீர நரேந்திர சிங்கன் 1706—1739 .... 35

VI. இலங்கை அரசர் பரம்பரையில் மாற்றம் சிறி விசய இராசசிங்கன் 1739—1747 ... 38

VII. கீர்த்தி சிறி இராசசிங்கன் 1747—1782 .... 41

VIII. ஒல்லாந்தரின் பரிபாலன முறை 1698—1796 .... 48

IX. ஒல்லாந்த தேசாதிபதிகள் 1640—1796 சமூக சமய பண்பாட்டு அபிவிருத்திகள் .... 56

## உசாவிய நூல்கள்

1. History of Ceylon for Schools.
   —Fr. S. G. Perera S. J.

2. Ceylon and The Hollanders, 1658-1796.
   —P. E. Pieris.


3. The Dutch in Ceylon—R. G. Anthonisy.

4. Ceylon under the British Occupation.
   1795-1833—Colvin R. DeSilva.

5. The Ceylon Antiquary and Literary Register.

6. Robert Knox.

7. Royal Asiatic Society-Ceylon Branch Journals.



இலங்கை
ஒல்லாந்தர் காலம்
யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம்
திரிகோணமலை
1766 இல் செய்த உடன்படிக்கையின் பின்
மட்டக்களப்பு
கண்டி
மல்வாணை
அங்குருங்கட்டை
கம்பளை
கொழும்பு
கொழும்பு
காலி



சிபால் தே வீரத்து கொல்லப்படுதல்



கொஸ்தர் கொல்லப்படுதல்


திரிகோணமலைத்
துறைமுகம்
துறைமுகம்

VEREENIGDE OOST-INDISCHE COMPAGNIE

UNITED EAST INDIA COMPANY.

## ஐக்கிய கிழக்கு இந்திய வர்த்தக சங்கம்

ஐக்கிய கிழக்கு இந்திய வர்த்தக சங்கம் 1602-ம் ஆண்டில் ஆரம்பமாயது. இஃது ஒல்லாந்தரால் கீழைத் தேச வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு ஏற்படுத்தப் பட்டது. பெல்சிய தேசம் ஒருகாலத்தில் ஒல்லாந்து, பெல்சியம் என இரு இராச்சியப் பிரிவுகளாக விருந்தது. இவை முற்காலத்தில் பள்ளப் பிரதேசங்கள் என்ற கருத்தில் நெதர்லாந்து எனப் பட்டன. உரோமைச் சக்கராதிபத்தியம் வீழ்ச்சியுற்ற பிற்பாடு அதன் அரசியல் பொறுப்பற்ற பல அரசாங்கங்களாகப் பிரிந்து, பிரபுக்கள், சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. 15-ம் நூற்றுண்டில் பார்கண்டி பட்டவர்த்தன பிரபுவால் ஒன்று சேர்க்கப்பட்டுப் பின் உரிமைப் பிரகாரம் அவுத்திரிய அரசால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. பின்பும் விவாக உரிமைகளால் இசுப்பானிய அரசுடன் சேர்ந்தது. இங்கிலாந்து மேரி இராணியை வதுவை செய்து இசுபெயினை ஆட்சி புரிந்த II-ம் பிலிப்பின் ஆட்சியிலடங்கியிருந்தது. இதுகாலத்தில் சமயப் புரட்சிகளால் கலவரப்பட்டு நின்ற நெதர்

லாந்து தேசம் பிலிப்பின் ஆட்சியால் விலகி வட பகுதியில் வசித்த மறுதலித்த கிறித்தவர்கள் ஒறஞ்சு நாட்டு உவில்லியம் என்பான் தலைமையில் தங்களை ஐக்கியப்படுத்தி "ஒல்லாந்து"-**Holland** என்ற தேசப் பெயருடன் ஆட்சி புரியலாயினர். தென் பகுதி பெல்சியம் என்ற தேசப் பெயருடன் ஆட்சி ஏற்படுத்திக் கொண்டது.

சுயாதினம் பெற்ற ஒல்லாந்தர் வாளாவிருந்தனரல்லர். "முயற்சி திருவினை ஆக்கும்" என்பதற் கிணங்க திரைகடலோடித் திரவியம் தேட முயன்றனர். இது வரையும் ஐரோப்பா நாடுகளுக்கு வியாபாரப் பொருட்களைக் கொண்டுவந்து சேர்க்க இவர்களுடைய கப்பல்களே உதவி செய்தன. சுயராச்சியம் பெற்றதும் இவர்களை முன்னேற விடாது தடுக்க முயன்றனர் பலர். இசுப்பெயின் தேசத்து அரசன் பிலிப்பு II போர்த்துக்காலுக்கும் அரசனுகி அவர்களை ஒல்லாந்தருடன் சேர்ந்து வியாபாரஞ் செய்யவிடாது தடுத்து நின்றனன். ஆங்கிலேய கப்பற் கொள்ளைக்காரர்கள் இவர்கள் கப்பல்களைச் சூறையாடினர். இவ்வித சூழ்ச்சிகளால் இடருண்ட ஒல்லாந்தர் சலிப்படையாது உற்சாகம் பெற்றவராய் தாமே நேரில் கிழக்கிந்திய நாடுகளுக்குச் சென்று வியாபாரப் பொருள்களைக் கொண்டுவர அவாவி நின்றனர். இவ்வித மனக் கிளர்ச்சியினல் உந்தப்பட ஒல்லாந்த வியாபாரிகள் பலர் வியாபாரச் சங்கமொன்றைத் தாபித்தனர். "தூரதேச வியாபார சங்கம்" எனப் பெயரிட்டனர். 1595-ம் ஆண்டு இச்சங்கம் 250 மனிதருடன் நான்கு கப்பல்களைக் கீழைத் தேசங்களுக்கு அனுப்பியது. கப்பற்குழாம் கொறணலிசு ஊதமன் என்பான்

தலைமையில் பிரயாணமாகி யாவா தீவுகளை யடைந்து ஏராளமான வாசனைத் திரவியங்களுடன் இரு வருட முடிவில் தாய்நாடு அடைந்தது. இச் சங்கத்தின் வெற்றியைக் கண்ட மற்றைய மக்கள் தனிப்பட்ட வெவ்வேறு வியாபாரச் சங்கங்களைத் தாபித்தனர். சங்கங்கள் எல்லாம் வியாபாரத்தில் ஈடுபடவே எதிரிகளின் மிகு வெறுப்பைப் பெற, இச் சங்கங்களுக்கெல்லாம் தங்கள் வியாபார நன்மை நோக்கி ஒன்றுசேர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட லாயிற்று; ஒன்ருய்ச் சேர்ந்தன. அச் சங்கமே இந்த (**V. O. C.**) ஐக்கிய கிழக்கு இந்திய வர்த்தக சங்கம் (1602). இச்சங்கம் அரசாங்கத்தின் ஆதரவையும் பெற்றது. கிழக்கிந்திய வர்த்தகத் தனியுரிமையும் இதற்கு அளிக்கப் பட்டது. அமஸ்ரடாம், சீலந்து, இடெல்வற்று, உரெருற்றடாம், காடன், என்னுசென் என்ற இடங்களின் உள்ளூர் ஆட்சிச் சபைகளாற் தெரிவு செய்யப்பெற்ற பதினேழு முகாமைத் தலைவர்களால் இச் சங்கம் நடாத்தப் பட்டது. பிரபுக்க ளெனப் பட்ட இத் தலைவர்களே சங்கத்தின் அலுவல்களைக் கொண்டு நடாத்தி இந்திய மகா தேசாதிபதி, ஆலோசனைச் சபையினர் இவர்களை நியமித்து வந்தனர்.

ஒல்லாந்த அரசாங்கம் இச் சங்கத்தில் வைத்த ஆதரவின் பேரால் அளித்த அதிகாரங்களாவன:-

**I.** இந்திய அரசர்களுடன் உடன்படிக்கை ஒப்பந்தஞ் செய்து சண்டை செய்யும் அதிகாரம்.

**II.** ஆங்காங்கு கோட்டை கட்டும் அதிகாரம்.

**III.** போர் வீரர்களைத் திரட்டு மதிகாரம்.

**IV.** *சேனாதிபதி முதலிய உத்தியோகங்களைக் கொடுத்துச் சேனையை நிர்வகிக்கும் அதிகாரம்.*

ஆனாலும் இச்சங்கத்தில் சேர்ந்தோர் யாவரும் ஒல்லாந்த அரசுக்கே பிரமாணிக்க முள்ளவரெனச் சத்தியஞ் செய்தல் வேண்டும்.

1610-ம் ஆண்டில் இச்சங்கத்தின் முதற்தேசாதிபதி, கீழைத் தேசங்களை நிர்வகிக்க நியமிக்கப் பட்டனர் எனினும் 1619லேதான் பத்தேவியாவிற் தலைமைத்தானம் ஏற்பட்டுப் பின் 1640லேதான் இலங்கையிற் தன் செல்வாக்கை நிலைநாட்ட லாயிற்று. 1658ல் போர்த்துக்கீசர் ஆளுகையிலிருந்த இலங்கைக் கரையோரங்களை வெற்றி கொண்டு தங்கள் ஆட்சியை அங்கு செலுத்த லாயினர். கண்டியில் IIம் இராசசிங்கன் ஒல்லாந்தரின் நடவடிக்கைகளைத் தடுக்க இயலாதவனாய் இலங்கையின் மத்திய பகுதிகளை ஆண்டுவந்தனன். போர்த்துக்கீசரை இலங்கையாற் துரத்த ஒல்லாந்தருக்குத் துணை செய்தானில்லை யெனினும் அனுசரணையா யிருந்தனன் இராசசிங்கன். ஆனால் போர்த்துக்கீசர் தோல்வியுற்றதை அறிந்ததும் அவர்களுக்கு உபகாரியாகவு மிருந்தனன். அரசனின் போக்கு ஒல்லாந்தருக்கு அறவே பிடிக்கவில்லை யெனினும் மிகவும் சாவதானமாக நடந்துகொண்டனர். கரையோரக் கோட்டைகளில் சேவை புரியும் போர்வீரர்களின் செலவுகளை அரசனே கொடுத்தனன் எனினும் ஆட்சி ஒல்லாந்தர்வசமே யிருந்தது. கோட்டைகளைத் தன் வசமாக்க அரசன் விரும்பினன். ஒல்லாந்தரோ அவற்றை ஒப்படைக்க எப்போதாயினும் மனம் ஒப்பினரல்லர்; என்றாலும் அரசன் கேட்கும்போதெல்லாம் கோட்டைகள் அரசனுக்கே சொந்தமானவை

யெனச் சொல்லி வந்தனர். இலங்கைச் சக்ரவர்த்தி தானே யென்று மமதை கொண்ட இராசசிங்கனுக்கு எழுதும் நிருபங்களி லெல்லாம் மகிமை பொருந்திய சக்கரவர்த்தியென்றும் தாமவனுக்கு அடிபணிந் திருப்ப தாகவும், அவன் குடைக்கீழ் தாமிருப்பதாகவும் மாரிசமாய் எழுதிக் கொள்வர். சௌக்கியப் பிரியனை அரசனும் இவற்றில் திருப்தி யடைந்தவனுய் அவர்கள் மேல் ஆக்குரோச மற்றவனு யிருந்தனன். வயோதிப திசை யடைந்துவரும் அரசன் காலஞ்செல்லத் தாம் இலங்கை முழுவதையும் கைப்பற்றிக்கொள்ளலா மென்ற பகற் கனவுடன் அரசன் எவ்வளவு இறுமாப்பாய்ப் பேசினுலும் எம்மட்டு உதாசீனத்துடன் நடத்தினுலும் பணிந்து வணங்கி மாசாலப் பூனைபோல் ஒல்லாந்தர் காரியத்தில் கண்ணும் கருத்துமா யிருந்தனர்.

கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, மாத்துறை இவற்றை ஒல்லாந்தர் தம்மாதீனத்தில் வைத்திருந்தனர். "பத்தேவிய கட்டளைகளுக் கிணங்கவும் ஒல்லாந்தர் சட்டங்களை அனுசரித்தும் தேசவழமைக்கு ஒப்பவும் பரிபாலனஞ்" செய்தனர்.

**விசேட குறிப்பு:**

**I.** ஐரோப்பாவில் ஒல்லாந்த அரசு ஏற்பட்ட வரலாறு.

**II.** ஒல்லாந்தர் கீழைத்தேச வர்த்தக சங்கத்தைத்தாபித்தல்.

**III.** இராசசிங்கன் **II**, ஒல்லாந்தர் இவர்களின் நிலைமை.

**பரீட்சை வினாக்கள்:**

1. ஒல்லாந்த அரசு கீழைத்தேச வர்த்தக சங்கத்திற்கு அளித்த அதிகாரங்கள் எவை?

2. **V. O. C.** இதன் வரலாற்றினைத் தருக.

3. இராசசிங்கன் ஒல்லாந்தரை வெறுத்ததேன்?

# II

# II-ம் இராசசிங்கனின் உள்ளூராட்சி முறைகள் வேற்றரசுகளுடன் செய்துகொண்ட தொடர்புகள்.

இராசசிங்கன் ஒல்லாந்தரால் அணைப்புண்டும் தனது சனங்களால் வெறுக்கப்பட்டும் எவ்வழி போவதென்று மறியாது தன்னுயிர்க்கு எப்போதும் ஆபத்து விளையுமென்ற அச்சத்துடன் அந்நிய மெய்க்காப்பாளர் கட்டுக்காவலில் சீவித்து வந்தனன். ஒல்லாந்தரோடு வர்த்தகஞ் செய்யப்படாதென உறுதியாகக் கட்டளையிட்டுத் தன் தேசத்திற் புகும் அந்நியர் யாவரையும் வெளிப்போகாதபடி சிறை செய்து, தன்னுட்டில் மன ஆத்திரங்கொண்டிருந்த பிரசைகள் மனதை மேலும் கவலையுறச் செய்யும்படி யாதும் பயன்தராத வியர்த்தமான வேலைகளில் இடையருது அமர்ந்திருக்கச் செய்தான். வேண்டாதவைக் கட்டுவதும் புதியதை இடிப்பதுமாய் மக்கள் மனது அலுக்கவும் சலிக்கவும் தக்கதாய் அவர்களை நடத்தி வந்தான். ஈட்டிமவரிப் பொருள்கள் பண்டசாலையில் உக்கிக்கிடக்க விட்டனன். தன்னுயிர்க்கு வினையம் எதுவிதமோ விளையும் என்ற அச்சத்தால் ஊர்தோறும் உழன்று திரிந்தான். ஒருகால் செங்கடகல

நகரியிலும் மறுபோது நிலாம்பையிலும் அப்பால் அங்குருங்கட்டையிலுமாகச் சுற்றி மாறி வசித்தான்.

1664-ல் தோற்றிய வால்வெள்ளியால் இக்குரூரனை அரசனை நாட்டிலிருக்க விட்டால் நாசம் வரத்தப்பாதென அபிப்பிராயப்பட்ட பிரசைகள் யாபேரும் அவனுயிரைப் பறிக்கச் சர்வப்பிரயத்தனஞ் செய்தனர். திசாதிபதிகள் சிலரின் சேர்க்கையோடு சதிகாரர் அர்த்த இராத்திரியில் நிலாம்பையில் அரசன் மனையை வளைந்து காவலாளரைக் கொன்று அரசனுயிரைப் பறிக்க எத்தனிக்கையில் அரசன் தன் துணைவீரரின் உதவியால் உயர்தப்பிச் சத்துருக்களை முன்னேற விடாது தடுத்துப் பலார்பற்றி விடியுமுன் மடமகா நுவரைக்குச் சமீபமாகவுள்ள கலேதா என்னு மிடத்திற் போயொழித்துக் கொண்டான்.

மனச் சோர்வுற்ற கலகக்காரர் அரசன் மகனைச் சிம்மாசனத்திலிருத்த எண்ணித் தன் தாயுடன் கண்டியில் வசித்திருந்த அவனைக் கைப்பற்றும்படி செங்கடகல நகரிக்குச் சென்றார். இளைஞனை அவன் திரளான கும்பலைக்கண்டு பயப்பிராந்தி கொண்டவனாய் யாதும் பேச இயலாது நின்றனன். சிம்மாசனத்தில் அவனையிருத்த முயற்சி செய்கிறார்களென்பதைக் கண்ட அரசன் சகோதரி இளைஞனைக் கொண்டு சென்று தகப்பனிடம் ஒப்படைத்தனள்.

இஃதிவ்வாறாக இது செய்வதோ அது செய்வதோ என்று திட்டஞ் செய்து கொள்வதற்கு மனமொப்பிக் கொள்ள இயலாத கலகக்காரர் ஒருவர் மற்றொரு வருயிரைச் சாடினர். இவ்வேளை அரசன் கலகக்காரர்

தலைவனாகிய அம்பன்வேலாருலா என்பானைச் சிறையாக்கி அவனைச் சித்திரவதை செய்யுமாறு ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தனன்.

இதே காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த பக்கீர் ஒருவன் தான் பல அற்புதங்கள் செய்வதாகச் சனங்களை ஏமாற்றி செங்கடகல நகரியிற் பெருங் கொந்தளிப்பை உண்டாக்கினான். இத்தோடு சனங்களிற்பலர், "இந்தப் பக்கீர் கோவைக் கொளித் தோடிய அரசனின் சகோதரனாகிய விசயபாலனின் புத்திரன்" என்று கூறி அவனை அரசனாக்க முயன்றனர். அரசன் அவனைப் பிணித்து விலங்கிடுமாறு கட்டளை பிறப்பிக்க, பக்கீர் பஞ்சாய்ப் பறந்து ஒல்லாந்தரை அடைந்தனன். வேண்டும் வேளையில் அரசனுக் கெதிராகக் கைத் தேங்காய் போல் உபகாரமாவானென நினைத்த ஒல்லாந்தர் அவனை வெகு உபசாரத்துடன் வரவேற்றனர். அற்புதவரத்தன் எனச்சனங்கள் இவன் முன்னும் பின்னும் தொடர்ந்து திரியவே ஒல்லாந்தர் இவனைக் காவலில் வைக்க யத்தனித்த போது, திரும்பிக் கண்டிக் கோடினன். அங்கு அரசனின் வாளுக்கிரையாகினன்.

அரசன் தன் பிரசைகளோடு மாத்திரமன்றி நாயக்க வம்மிசதத்தவரான தன் இனசனத்தோடும் வெகுபகைமை யுடையவனானான். அரசனின் போக்கு வாக்கு யாவர்க்கும் வெறுப்புக் கொடுத்தது. யாவரும் அவனுயிரைக் கவர்வதில் பெரு முயற்சிகள் செய்தனர், இதனால் அரசனுக்கு யாவர் மேலும் சந்தேக முண்டாயது. ஆகவே செங்கோலோச்சாது எடுத்ததற் கெல்லாம் வாளோச்சி நின்றான். ஒல்லாந்தரும்

மறுபக்கத்தில் எல்லைப்புறங்க ளெல்லாம் மக்களுக்கு வெகு இடையூறுகள் விளைத்து நின்றனர். நாயக்க வம்மிசத்தினர் ஆங்கிலேயர் சார்பை நாடினர். ஒல்லாந்தரை வெறுத்தனர். அரசனின் மனைவி மக்கள் இனசனங்கள் யாவரும் மதுரை நாயக்க வம்மிசத்த வருடன் தொடர்பு பூண்டவராய் வாழ்ந்து வந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவின் மேற்குப் பாகத்திலுள்ள தேசங்களெல்லாம் இலங்கைக் கறுவாவுக்கு நேர்நிகரில்லை யென்றும் அதனுலைதற்கு என்ன விலையும் பாணிக்கலா மென்றெண்ணி யிருந்தனர். அதனால் அவ்வர்த்தகத்தி லீடுபட்ட போர்த்துக்கீசர் செல்வப் பெருக்கும் அவரைத் தொடர்ந்த ஒல்லாந்தர் ஈட்டிய செல்வப் பெருக்கும் கண்ட இதர ஐரோப்பியர் தமக்குமிதிலோர் பாத்தியம் ஏன் இருத்தலாகாதென் றெண்ணியவராய் ஆங்கிலேயர், பிரான்சர், தேனியர் முதலானோர் கீழைத் தேசவர்த்தக சங்கங்களை நிறுவலாயினர்.

பிராங்கோயி கறூன் என்னும் பிரான்சிய னொருவன் ஒல்லாந்தரோடு சேர்ந்து நெடுங்காலமாய் வியாபாரஞ் செய்து வந்தனன். இவன் ஒல்லாந்தரின் வியாபார அபிவிருத்திக்கு மிகவும் துணை புரிந்தவன். 1664-ம் ஆண்டில், பிறர் அடிக்கும் கொள்ளையில் பிரான்சியரும் ஏன் பங்கு பெறக் கூடாதெனச் சொல்லி பிரான்சிய வர்த்தக சங்கத்தாரிடஞ் சென்று இலங்கையில் வர்த்தக தாபனம் நிறுவுவதற்காக ஓர் துறை முகத்தைப் பிடிக்க வேண்டுமென்றும் அதற்குத் தான் உதவி செய்வதாகவும் தெரிவித்து நின்றனன். சங்கமும் அதற்கிணங்கி டிலாகே என்பானைத்

தளபதியாக்கி ஓர் கப்பற் குழாத்தை அனுப்பியது. பிராங்கோயி கறூன் என்பானும் கப்பற் குழாத்துடன் சேர்ந்து வந்து 1672-ல் திரிகோணமலையிற் கால் வைத்தனன். திரிகோணமலைக் குடாவிலுள்ள தீவுகளி ரண்டையும் டிலாகேகைப்பற்றி அதிலொன்றை அரண் படுத்தி வர்த்தக நிலையமாக்கி, தானுபதி ஒருவனை அரச னிடம் அனுப்பினன். ஒல்லாந்த வேவுகாரன்ஒருவன் பிரான்சரிடம் வந்து, ஒல்லாந்தருக்கும் அரசனுக்கு மிடையில் ஐக்கியம் நிலவுவதாகவும், கண்டியரசனுக்குத் தூதனுப்புவதில் ஆவதொன்றுமில்லை யெனவும் கூறி நின்றனன். பிரான்சியர் இவன் கூற்றைப் பொருட் படுத்தாது அரசனிடம் தானுதிபதியை அனுப்பினர். ஆழும் ஆபத்திலிருப்பவன் வைக்கோலையும் தாவிப் பிடிக்க யத்தனிப்பானன்றோ; அதேபோல் இராச சிங்கனும் பிரான்சியரோடு தாமதியாது உடன்படிக்கை செய்து திரிகோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு என்ற பகுதிகளைப் பிரான்சருக்குத் தத்தம் பண்ணினன். தன்னிடம் வந்த பிரான்சிய தானுதிபதியை வெகு பரிசனரோடும் திரிகோண மலைக்கு அனுப்பி வைத்தானேனும் அன்னபானுதி களுக்கு ஏதும் அனுப்பாததினுல் பிரான்சியர் மறு படியும் ஓர் தூது போக்க வேண்டியதாயிருந்தது. இம்முறை அனுப்பப்பட்டவன் இராச சமூகத்தில் புழங்கவேண்டிய முறைதலை சற்றுந் தெரியாதவ னகையால் அரசன் இவன் சீர்கேட்டைக்கண்டு அவனைச் சங்கிலியில் மாட்டி விடுமாறு கட்டளையிட்டனன். போசன பதார்த்தங்களை வெகு நாளாகக் காத்திருந்து ஏமாந்த பிரான்சியர் ஆக்குரோச முடையவராய் இந்தியாவுக்குச் சென்றனர்.

பிரான்சரைப் போல் ஆங்கிலேயரும் கீழைத் தேசங்களை நாடினர். ஆங்கிலேயர் கீழைத் தேசவர்த்தக சங்கம் 17-ம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்களிலே தாபிக்கப் பெற்றதெனினும் 1648-க்குப் பின்பே ஆங்கிலேயர் இந்த நாட்டில் உலாவத் தொடங்கினர். இந்தியாவிலே, சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்கள் இவர்கள் வசமிருந்தன. போர்த்துக் கீசரும் ஆங்கிலேயரும் மிகவும் ஒற்றுமையாக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களின் அரசகுடும்ப சம்பந்தங்கள் இவர்களை வெகுவாய்ப் பந்தித்து நின்றது. ஒல்லாந்தர் இவர்களில் வெகு விழிப்பாயிருந்தனர். 1660-ல் 'ஆன்' எனும் கப்பல் சூறாவளிக்காற்றிலகப் பட்டுக் கொட்டியாரக் குடாவில் வந்து ஒதுங்கியது. றொபேட் நொக்சும் அவன் தகப்பனும், மேலும் பதினாறு மாலுமிகளும் இராசசிங்கனால் மறியலாக்கப் பட்டனர். நொக்சின் தகப்பன் 1661-ல் இலங்கை யிலேயே இறந்தனன். இராசசிங்கனுக்கோ இந்த வெள்ளைச் சாதியினரைச் சிறை பிடித்துக் சேவலப் படுத்த விருப்பம். ஆகவே இவர்களைச் சிறை மீட்கப்பல பிரயத்தனங்கள் செய்தும் வாய்க்கவில்லை. ஆனால் றொபேட் நொக்சு 1679-ல் மறியலினின்றும் தப்பி அரிப்பிலுள்ள ஒல்லாந்தரை யடைய அவர்களி னுதவியோடு இங்கிலாந்து திரும்பினன். இவ்வாறு வேறுஞ் சிலர் தப்பினர். தப்ப வழியற்றுத் தயங்கியோர் சிங்களப் பெண்களை வதுவை செய்து கண்டியில் வதியலாயினர்.

**விசேட குறிப்பு.**

1. 1664-ல் வால்வெள்ளியின் தோற்றம்.

2. அரசனின் உயிருக்குச் சதிகள் நடந்தமை.

3. பக்கீர் ஒருவனின் செயல்களும் அவன் கொல்லப்படுதலும்.

4. பிரான்சர் ஆங்கியேர் தொடர்பு.

5. றொபேட் நொக்சின் மறியல்.

**பரீட்சை வினாக்கள்:**

1. இராசசிங்கனின் உயிரைப் போக்க மக்கள் விரும்பியதேன்?

2. றொபேட் நொக்சின் மறியல். இதனை விபரிக்குக?

3. இராசசிங்கன் தன் எதிரிகளை எவ்வாறு கையாண்டனன்?

# III

# II-ம் இராசசிங்கனின் இறுதிக்காலம்
# 1635—1687

## அரசனின் பிரதானிகளுக்கும் ஒல்லாந்தருக்கு மிடையில் ஏற்பட்ட சமரசம்

இராசசிங்கனுக்கோ வயது ஏறிக்கொண்டு வந்தது. வயதேறியது போல் பகைவரின் தொகையும் ஏறி வந்தது. அரசனின் கொடுங்கோல் காரணமாகத் தென்னக்கோன் என்ற ஏழுகோறளைத் திசாதிபதி 1673-ல் அரசனை விட்டு விலகி ஒல்லாந்தர் பக்கமாயினன். இதையறிந்த அரசன் தென்னக்கோனின் இனசனத்தாரை வருத்த ஏழுகோறளை மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒல்லாந்தரிடம் சரண்புக அவர்கள் ஏழு கோறளையைத் தங்களுக்கு ஆக்கிக் கொண்டனர். அரசனுக்கோ வெகு ஆத்திரம். தென்னக்கோனுக்கும் ஒல்லாந்தருக்கும் ஒன்று சேர வஞ்சம் தீர்க்கத் தருணம் பார்த்திருந்தனன்.

ஒல்லாந்தர் அரசு முன்னேறுவதை அரசன் வெறுத்தனன். அவர்களுடன் வியாபாரஞ் செய்தலாகாதென மக்களுக்குக் கட்டளை விடுத்தனன். கலகஞ் செய்யுமாறும் தூண்டினன். அரசனின் தூண்டுதலி

ஞலோ அன்றேல் தன் வலியவோ யாழ்ப்பாணத்தில் ஓர் கலகம் ஏற்படலாயிற்று. யாழ்ப்பாணம் ஒல்லாந் தருக்கானபோது யாக்கோபு வான் றீ என்பான் அதற்குத் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான். இலங்கையில் போர்த்துக்கீசரின் இடங்களைக் கைப் பற்றிய பின் இந்தியாவிலும் அவர்களோடு அமர் தொடுத்து அதற்குத் துணையாக இங்குள்ள சேனைகளை ஒல்லாந்தர் அங்கு அனுப்பினர். அவ்வேளை யாழ்ப் பாணத்திற்றும் மறியற் படுத்திய போர்த்துக்கீசருள், தமக்குச் சேவை செய்ய இணங்கியவர்களைக் கொண்ட ஓர் சிறு சேனையை யாழ்ப்பாணக் கோட்டையின் பாதுகாப்பிற்கு விட்டிருந்தனர். இது சமயம் மன்னரி லுள்ள தொம் லூயிஸ் என்பான் அங்குள்ள சேனை யைத் தனது பண்ணிக்கொண்டு தேவாலயத்தில் ஆராதனை நடைபெறும் வேளையில் ஒல்லாந்தரைக் கொன்று கோட்டையைக் கைப்பற்றத் துணிந்தனன். இச் சூழ்ச்சியை எதுவிதமோ அறிந்து ஒல்லாந்தர் இந்த ஆபத்தினின்றும் தப்பிக்கொண்டனர்.

இது செய்தி கேள்வியுற்ற யாக்கோபுவான் றீ கலகக்காரரைச் சிறை செய்து சிலரைத் தூக்கியும், சிலரை வாளுக்கிரையாக்கியும் வதைத்தனன். அன்றி யும் கலகத் தலைவர்களை சில்லிலே வைத்துச் சுழற்றி கண்ட கோடரியால் நெஞ்சைப் பிளந்து இருதயங்களைப் பிடுங்கி அவர்கள் வாய்க்குள் புகுத்தி நிட்டூரஞ் செய் வித்தனன். இவ்வாறு வாதிக்கப்பட்டோருள் யோன் கோல்தேறியோ என்ற யேசு சபைச் சுவாமியாரும் ஒருவராவர். வயது சென்று வியாதி வாய்ப்பட்டு ஊரை விட்டுப் போகமுடியாத நிலைமையில் பாவசங்கீர்த்

தனம் மூலம் அறிந்த இரகசியத்தை வெளியிட மறுத்ததின் காரணமே இவருக்கும் இத்துன்பம் நேரிடலாயிற்று.

இவ்வித கோளாறுகளுக் கெல்லாம் அரசனே காரணம் என்றும் உடந்தையென்றும் ஒல்லாந்தர் நினைத்தவராய் மக்களைப் பயமுறுத்தப் பல இடுக்கண் விளைத்து நின்றனர். விண்ணப்பங்களோடும், முறைப்பாடுகளோடும் அரசனிடம் அனுப்பப் பெற்ற ஒல்லாந்தரை அரசன் திருப்பியனுப்புவதே கிடையாது. இடையறாது ஒல்லாந்தரை அல்லற் படுத்தி நின்றான். அவர்களோடு தனது பிரசைகள் வர்த்தகஞ் செய்யலாகாதெனத் தடுத்து நின்றனன். அவர்கள் நாடுகளிலுள்ள சுதேசிகளைத் தனது நாட்டுக்கு வரும்படி ஏவி, ஊரை விடுமுன் பயிர் பச்சை ஒன்றுமிராது தகனித்துவிட வேண்டுமென அவர்களுக்குப் புத்தி புகட்டியு மிருந்தான். இவ்வாறு ஒல்லாந்தருக்கு இடுக்கண் விளைவித்த இவன் தனது நாட்டிலுள்ள கலகக்காரரைத் தண்டிக்க ஒல்லாந்தரை வேண்டியும் நின்றனன். என்னதான் செய்தாலும் ஒல்லாந்தர் என்றும் சிரம் பணிபவராய் அரசன் கேள்விப்படி கற்பிட்டி முதலிய இடங்களில் வியாபார மூலமாய் வரும் வரிகளை அரசன் பெறுவதற்கும் இடங்கொடுத்தனர். அரசன் பிரசைகள் மட்டக்களப்பு, திரிகோணமலை, கொட்டியாரம் ஆதியாமிடங்களில் அரசனுக் கெதிராக எழுந்தபோது அவர்களை யடக்க ஒல்லாந்தரின் உதவியை நாடிப் பெற்றனன். இதைத் தாயமாகக் கொண்டு ஒல்லாந்தர் பதினைந்து கோறளைப் பகுதியையும் முத்துக் குளிப்பு நடைபெறும் சிலாபப் பகுதிகளையும் தமக்காக்கிக் கொண்டனர்.

வயது ஏற ஏற அரசனின் குணமும் நடையும் நிலை தளம்புவன வாயின. ஒருகால் இளகிக் கொடுத்த அதே விடயத்தில் மறுகால் பிடிவாதமாய் நிற்பான். ஆம் என்றதெல்லாம் இல்லையென்றும் இல்லையென்ற தெல்லாம் ஆம் என்று சொல்லக் காலந் தாழ்க்கமாட்டான். ஆங்கிலேயரின் துணையோடு ஒல்லாந்தரை நாடு கடத்த எண்ணிய இவன் ஆங்கிலர் அனுப்பிய நிருபங்களை ஒல்லாந்தருக்கனுப்பி அதே வேளை ஆங்கிலேயரிடம் தனது தாறுபதியை அனுப்பி வைத்தான். இந்த மாறு கோலத்தைக் கண்ட ஒல்லாந்தர் அரசனது பேச்சில் எள்ளளவும் நம்பிக்கையற்றவராய்த் தம்மைப் பலப்படுத்தத் துணிந்து கொழும்பிலிருந்து அம்பாந்தோட்டை வழியாய் மட்டக்களப்பிற்கும், கொழும்பிலிருந்து சலாபம் வழியாய்க் கற்பிட்டிக்கும் தெருக்களைத் திறந்தனர்.

ஒல்லாந்த தேசாதிபதி இலங்கைக் கரை நாடுகளைக் கைப்பற்றியமை பத்தாவியாவிலுள்ள பேரதிகாரிகளுக்கு முற்றும் ஏற்காததாயிருந்தது. கைப்பற்றிய நாடுகள் அதிகமதிகமாகச் சண்டைகளும் அதிகரிக்குமென்றும் செலவு மதற்கேற்க ஏறுமென்றும். இதனல் வர்த்தகத்திற்குச் சேதமாகுமென்றும் அபிப்பிராயப்படவே மூன்று கோறளையையும், ஏழுகோறளையையும்அரசனுக்குக் கொடுக்குமாறு ஆஞ்ஞையிட்டனர். மௌட்டியம் நிறைந்த அரசனே மடமை மிகுந்தவனய் ஒல்லாந்தர் கையாற் தான் வாங்குதல் தகாதெனக் கூறி மேற் சொல்லிய இடங்களைத் தீக்கிரையாக்கித் தானய் அவற்றைக் கைப்பற்றியதாகப் பெருமை பாராட்டினன்.

அரசனின் பிரதானிகளோ அவனின் மனோலூக் கத்தைத் திருப்திப் படுத்துவதன் மூலம் அவனைத் தம் வசமாக்கி அரசைத் தமதாக்கிக் கொண்டனர். துரகாரூடனாய்ச் செல்வதில் பேரபேட்சை கொண் டிருந்த அரசனை உவகைப் படுத்த நினைத்து தானுபதி களை ஒல்லாந்தரிட மனுப்பி அழகான குதிரைகளைப் பரிசளிக்குமாறு கேட்டு நின்றனர். ஒல்லாந்தரும் வேண்டுகோளுக் கிணங்கி வெண்ணிறச் சிங்கக்குருளை கள் இரண்டு, வரிப்புலிகள் மூன்று, புனுகு பூனைகள் பன்னிரண்டு, பாரசீகக் குதிரைகள் இரண்டு, பருந்து கள் இருபது என்ற விலங்கினங்களை அனுப்பி வைத் தனர். பிரதானிகளோ ஒல்லாந்தரைத் தடுத்துத் தாமே அப்பரிசுகளை அரசனிடம் ஒப்பித்தனர். அரச னைக் காணப் பலமுறையாக ஒல்லாந்தர் பிரயத்தனப் பட்டும் வாய்க்கவில்லை.

அறனை பெயர்ந்த அரசன் தனது சேனைகளை அனுப்பி நீர் கொழும்பு நாட்டில் ஒல்லாந்தர் சேர்த்து வைத்திருந்த கறுவா முழுவதையும் அபகரித்துக் கொண்டான். தானுபதிகளை யனுப்பி, ஒல்லாந்த தேசாதிபதி முறையீடு செய்தபோது தனது சம்மத மின்றித் தனது நாட்டில் சேகரித்த கறுவாவுக்கு ஒல்லாந்தர் உரிமை பாராட்ட முடியாதென்றும் அவர்க்கு வேண்டுமாயின் தான் அனுப்பச் சித்தமா யிருக்கிறேனென்றுங் கூறி அவ்வண்ணமே வேண்டிய அளவு அனுப்பி வைத்தான்.

ஒல்லாந்தர்க் கிணங்க நடந்து, அரசன் மரணமாக இராச்சியத்தைக் கைப்பற்ற விரும்பிய பிரதானிகள் அவன் சிறைப்படுத்தியிருந்த ஒல்லாந்த தானுபதிகளை

விடுதலை செய்விக்கக் கருதி, மகா நாயக்க எனும் அத்தியட்ச குருவை ஒல்லாந்த தேசாதிபதியிடம் அனுப்பி, குருவோடு வேறும் பிரமுகர்களைச் சேர்த்துத் தேசாதிபதியின் மனுவுடன் அரசனிடம் அனுப்புமாறு கேட்டனர். மகா நாயக்க குருவுக்கு ஒல்லாந்தர் சோடசோபசாரங்கள் செய்து வேண்டியது கொடுத்துச் சன்மானித்து அனுப்பியதால் அரசனும் மகிழ்ந்து சிறை செய்தோரை விடுதலையாக்கினன்.

இராசசிங்கன் தனது கடைசிக் காலங்களை அங்குருங்கட்டையிற் கழித்து வந்தனன். அரசன் தனக்கு மரணவேளை அண்டியதெனை அறிந்து தன் மகனையும் பிரதானிகளையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் மகனை அரசனுக்கி அவன் பாதங்களில் அடிபணிந்து வணங்கி ஒல்லாந்தருடன் என்றும் ஒற்றுமையாக வாழ்ந்திருக்குமாறு ஏவி 1687-ம் ஆண்டில் உயிர் நீத்தனன்.

மட்டமான உயரமும் திடமான தேகக் கட்டும், பிரளும் கண்முளிகளும், கன்னங்கரே லென்ற நிறமும், சற்றே வழுக்கையான தலையும், வடிவான தாடி மயிருடன் பொருந்திய நீண்ட மீசையும் உடையவனுய் தானே அமைத்துக்கொண்ட உடைக்கோலம் அணிந்தவனுய், கத்தோலிக்க குருமார் அணியும் விறற்று போன்ற குல்லாவை அணிந்து கெம்பீரமாத் தோற்றமளிப்பன். பொன்னுற் செய்த கை பிடியோடு பொருந்திய வாளை பொன் தகட்டாற் செய்த உறையிற் போட்டு, பொன்காப்பிட்ட பிரம்பைக் கையில் வைத்துக் காட்சி யளிப்பன். காலிற் சப்பாத்து அணிந்திருப்பன்.

உண்பதில் மிதமானவன்; ஆலோசித்தே எதுவுஞ் செய்பவன் எனினும் மற்றவர் யோசனைகளை மதிப்பவனல்லன். விலங்கினங்களில் மிகுந்த விருப்புடையன். குதிரை யேற்றத்தில் வெகு பிரீதி யுடையவன். வேட்டைப் பிரியன்; நீச்சல் வீரன். சமயப் பற்றில்லாதவன்.

**விசேட குறிப்பு:—**

1. தென்னக்கோன் ஒல்லாந்தர் பக்கமாதல் 1673.
2. யாழ்ப்பாணத்திற் குழப்பம்.
3. இராசசிங்கன் பிரதானிகள் வசமாதல்
4. மகாநாயக்க குரு சிறைப்பட்ட ஒல்லாந்தரைச் சிறை நீக்க உதவியமை.
5. இராசசிங்கன் இறத்தல் 1687.

**பரீட்சை விஞக்கள்:—**

1. யாழ்ப்பாணத்தில் குழப்பம் ஏற்பட்ட காரணம் என்ன? முடிவென்ன?
2. இராசசிங்கன் ஒல்லாந்தருடன் எவ்வாறு நடந்தனன்?
3. இராசசிங்கனின் குணதிசயங்களை எடுத்துரைக்குக.

# IV

# விமலதரும சூரியன் - II. 1687-1706.

## ஒல்லாந்தர் மாட்டில் அரசனின் விரோத மனப்பான்மை

1688-ல் விமலதரும சூரியன்-II இலங்கையின் அரசனுக முடிசூட்டப்பட்டான். ஒல்லாந்தரும் முடிசூட்டு விழாவிற் கலந்து கொண்டனர். ஒல்லாந்த தேசாதிபதிக்கு இந்த வைபவ ஞாபகமாக முற்றும் பொன்னுற் செய்த துப்பாக்கி அளிக்கப்பட்டதுமன்றி சிறையாக்கப்பட்ட ஒல்லாந்தர் யாவரும் விடுதலை யாக்கவும் பட்டனர்.

இளவரசனுயிருந்த காலத்தில் இவனை யாரும் அறியார். 1664-ல் நடந்த கலகம் காரணமாகத் தகப்பன் இராசசிங்கனுல் மறைத்து வைத்து வளர்க்கப் பட்டான். புத்தகுருக்கள் மத்தியில் வளர்ந்தனன். இராச்சிய பரிபாலனஞ் செய்ய ஏற்ற வமதுடையவனு மல்லன். அரசியற் றந்திரம் இவனுக்கு மருந்துக்குமில்லை. ஆகையினுல், அதிகப்பற்றுகத் தன் அரண்மனை உத்தியோகத்தர் ஆலோசனை பெற்றே கருமங்களை நிகழ்த்தி வந்தான். ஒல்லாந்தர் பிடித்த நாடுகளுக்கும் தானே அரசனென அறிவித்து வலிகமம் என்னுமிடத்தை, அது ஒல்லாந்தர் நாட்டிலிருந்தாலும், தனக்குப் பிடித்த ஓர் பிரதானிக்கு நன்கொடையாக அளித்தனன்.

அரசன் வர்த்தகத்தை அதிகரிக்க எண்ணி வருடா வருடம் 500 சிப்பம் கறுவாவை ஒல்லாந்தர் கப்பலில் ஏற்றித் தமக்கு வேண்டிய இடத்தில் விற்க ஒழுங்கு பண்ணுமாறு ஒல்லாந்தரைக் கேட்டனன். அவர்களோ அதற்கிணங்காராய்க் கறுவா முழுவதையும் தமக்கே விற்று விடும்படி கேட்டார். அரசன் வெகுண்டு துறைமுகங்கள் யாவற்றையும் தனக்கொப்புவிக்கும்படி ஆஞ்ஞாபித்தான். அரசனும் தன் முதலாம் அதிகாரத்தை ஒல்லாந்தரிடமனுப்பி, கறுவாக்காலத்துக்கு முந்தி ஒவ்வொரு வருடமும் பட்டை உரிக்குமுன் தானுபதிகளைத் தன்னிடமனுப்பி அனுமதி பெற்றே வேலை ஆரம்பிக்க வேண்டுமென அறிவித்தான். கடன் இறுக்கப் பட்டாலன்றி எதுவிதக் கட்டளையும் ஏற்றுக் கொள்ளப்படாதென ஒல்லாந்தர் விரும்பினரேனும் சமாதான முறையை நாடுவதே நலமாகுமென நினைத்துப் பின்வரும் நிபந்தனைகள் பொருந்திய ஓர் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு அரசனுக்குத் தூதனுப்பினர்.

**I.** இதுவரையும் ஆண்டு அனுவித்துவரும் நிலபுலங்களையும், துறைமுகங்களையும் யாதும் வியாச்சியமின்றி, அரசன் கடனிறுக்கும் வரையும் ஒல்லாந்தர் ஆண்டுவருதல்.

**II.** அரசனுக்கும் ஒல்லாந்தருக்கு மிடையில், ஒற்றுமை அடிப்படையில், வரியோ, திறையோ, ஒன்றுமில்லாமல்இட்டப்படி வியாபாரம் நடைபெற வேண்டும். கறுவா, மிளகு, மெழுகு, தந்தம் இவற்றை அரசன் ஒல்லாந்தருக்கே விற்றல் வேண்டும்.

**III.** ஆங்கிலேயர், பிரான்சர், மற்றும் ஐரோப்பிய சாதியினர் அரசன் துறைமுகங்கள் மூலம் நாட்டுள் அனுமதிக்கப் படலாகாது.

**IV.** அரசன் நாட்டில் ஒல்லாந்தர் கறுவாச் சேகரிக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் அதற்காக அரசனுக்கு வருடா வருடம் ஒல்லாந்தர் பரிசுகள் அனுப்புதல்.

**V.** உரோமன் கத்தோலிக்கு குருமார் எவரையேனும் அரசன் தன்நாட்டுள் அனுமதித்தலாகாது.

இந்நிபந்தனைகளைக் கொண்டு சென்ற தானுதிபதி கடனிறுக்கும் வரையிலென்று சொன்னது தான் தாமதம் அரசன் சினந்து, "கடனைக் கண்டதார்?, கேட்டதார்? செய்த நிபந்தனைகளுக்கு மாருய் கொழும்பை உங்கள் வசமாக்கிக்கொண்டீர்; போர்த்துக்கீசரிடம் சூறையாடிய பொருள்களில் ஓர் இம்மியும் தந்திரல்லீர்; எனது பாசறைகளையும் வேளா வேளைகளிற் சருவினீர்கள்; கரைநாட்டுச் செல்வங்களையெல்லாம் சம்பூர்த்தியாய் அனுபவித்துக் கொண்டீர். இவையெல்லாம் உங்கள் யுத்த செலவுக்கு மேலதிகமாகும்; ஆகையால் கடன் என்ற வார்த்தை இனிமேல் வரப்படாது" என்று சினந்து கூறினன்.

இவ்வாருக அரசனுக்கும் ஒல்லாந்தருக்கும் கசப்பு ஏறிவர இருபகுதியினரும் ஒன்றும் சாதிக்கவியலாது தங்கள் வலிய ஓய்ந்திருந்தனர். என்ருலும் விமலதருமன் தனது வர்த்தகத்திற்குச் சர்வ சுயாதீனமிருக்க வேண்டுமென்று நிலைநாட்டி நின்ருன்.

ஒல்லாந்தர் இதற்கிணங்க மனமில்லாதிருந்தனர். அது கண்ட அரசன் தனது கப்பலில் பாக்கேற்றி அரச கொடியையும் ஏற்றி அதனைக் கல்பிட்டி வழியாற் செலுத்தியபோது ஒல்லாந்தர் கப்பலை மறியற்படுத்திக் கொண்டனர். இது கேள்வியுற்ற அரசன் தாமதமின்றி, துறைமுகங்கள் யாவும் தனக்கொப்பிக்கப் பட வேண்டுமென்று விளம்பரஞ் செய்தனன். தேசாதி பதியாகிய பீல் தட்டிக் கழித்து நின்றனனேனும் அரசன் மனம்மாறினனில்லை.

1692-ல் தோமாஸ் வான் றீ என்பான் தேசாதிபதி யானன். இவன் எவ்வழியானும் அரசனைத் திருப்திப் படுத்தப் பிரயாசப்படவே அரசனிடமிருந்து வெகு சலாக்கியங்களை யடைந்தான். முன்னிலும் பார்க்க அதிக கறுவாவைப் பெற்று அவை முழுவதையும் விற்பதா யின் கறுவாவின் விலைகுறையு மென்றஞ்சி ஓர் பாகத்தை எரித்தழித்தனன். சிலாபத்து முத்துக் குளிப் பாலும் வெகு இலாபமடைந்தனன். கிழக்கு மாகாணத் துறைமுகங்களாம் திரிகோணமலை மட்டக்களப்பு இவற்றை அரசனிட்டப்படி உபயோகிக்கத் திறந்து விட்டனன்.

கெறிற் டீ ஈறி என்பான் 1697-ல் ஒல்லாந்த தேசாதிபதியானன். இவன் மேலதிகாரிகளின் எண் ணப்படி கண்டி அரசனுக்குச் செய்யக் கூடுமான வந் தனை வணக்கங்களும் உபசார வார்த்தைகளும் மலியப் பொலியச் செய்தும் சொல்லியும் அத்தோடு விலைபெற்ற வெகுமதிகளைத் தாராளமாய் அனுப்பியும் வந்தான்.

ஈறி என்பான் 1702-ல் இறக்கவே யோவானிஸ் சைமன்ஸ் தேசாதிபதியாக்கப் பட்டான். இவன் காலத்

திலேயே ஏந்தலே என்ற இடத்தில் குட்டரோக ஆசுப்பத்திரி கட்டப்படலாயிற்று. யாழ்ப்பாணத்து மக்களின் தேசவழமைச் சட்டத்தைத் தொகுப்பித்த வனும் இவனே.

1706-ம் ஆண்டு ஆனிமாதம் விமலதருமனும் தனது இருபது வருட ஆட்சிக்குப்பின் மரணத்திரை யுள் மறைந்தனன். இவன் தயாளகுணமும் பரோபகார சிந்தையு முள்ளவன். தனசமயத்தில் அபிமான முடையவனுயினும் அவரவர் தத்தம் சமயத்தை அனுட் டிக்கச் சுயாதீனம் கொடுத்திருந்தான். யுத்த மின்மை யால் தேசம் முன்னேற்ற மடைந்ததெனலாம். தலை நகரை வெகுவாய் அலங்கரித்து மூன்றடுக்கு மெத்தை யுள்ள தாலத மாளிகையைக் கட்டுவித்தனன். தேவாலய மானியங்களைப் பற்றிய பிர மாணங்களை ஏற்படுத்தினுன்.

**விசேட குறிப்பு:—**

I. 1688 ல் விமலதரும சூரியன் II அரசனுதல்.

II. ஒல்லாந்தர் அரசனை வேண்டி நின்ற சில நிபந் தனைகளும் அவற்றை அரசன் மறுத்ததும்.

III. ஒல்லாந்த தேசாதிபதிகள்
தோமாஸ் வான் றீ 1692—1697
கெறிற் டீ ஈறி 1697—1702
யோவானிஸ் சைமன்ஸ். 1703—1707

Iv. 1706ல் விமலதரும சூரியன் இறத்தல்.

**பரீட்சை வினுக்கள்:**

1. விமலதருமசூரியனின் வரலாற்றினைத் தந்து அவன் குணுதிசயங்களை விபரி.

2. விமலதருமசூரியன் காலத்து ஒல்லாந்த தேசாதிபதிகளில் எவன் சிறந்தான்? ஏன்?

3. விமலதருமன் காலத்தில் சண்டையில்லை. ஏன்?

---

# V

## சிறி வீர நரேந்திர சிங்கன். 1706—1739

1706ம் ஆண்டில் விமலதரும சூரியன் தன் மக னுக்கு மணமகளாக மதுரை இராச குமாரியை வர வழைத்து வதுவை செய்துகொடுத்தனன். இராச குமாரியுடன் தாயும் இங்கு வந்தனள். இவனைக் குண்ட சாலை இராசன் என்றும் வழங்குவர். குண்டசாலை யிலுள்ள மாளிகையில் வளர்ந்து வந்தமையாற் போலும் மக்கள் இவ்வாறு வழங்குவாராயினர். இவன் அரசு கட்டிலேறியபோது பதினேழு ஆட்டைப் பிராயத்த னய், துடுக்கனய், மிடுக்கனய், துன்மார்க்கன யிருந் தமையால் மக்களில் ஒரு பகுதியினர் வேறொருவனை அரசனுக்க முயன்றனரேனும் தங்கள் முயற்சியிற் தோல்வியுற்றனர்.

விமலதரும சூரியனின் அந்திய காலங்களில் நோய் வாய்ப் பட்டிருந்தமையையும், அவன் பின் வந்த அர சன் இளவலா யிருந்தமையையும், இவன் அரசனுன போது ஏற்பட்ட கலகங்களையும் ஒல்லாந்தர் ஆதாய மாக்கிக்கொண்டு துறைமுகங்களெல்லா வற்றையும் அரசனின் வர்த்தகத்திற்கு இடையூருகத் தடை பண்ணலாயினர். இதனுல் இறக்குமதிப் பொருள்கள் யாவும் வர்த்தக சங்கத்தார் குறித்தபடி அரு விலைக்

குக் கொள்ளப்பட வேண்டியதாயிற்று. ஏற்றுமதிப் பொருள்களையும் சங்கத்தார் கூறும் விலைக்கு விற்கவும் வேண்டியதாயிற்று. இதனால் அரசனின் வியாபாரம் பட்டது.

கண்டியரசன் வழிதுறை காணாது தனது நாட்டின் கபாடங்கள் யாவற்றையும் பூட்டி வைத்தனன். சில காலத்தால் ஒல்லாந்தர் கருத்துக் கியைந்து அவற்றைத் திறந்த போதிலும் வர்த்தக சுயாதீனம் அளிக்காது மறுத்தனர். பத்தேவியாவி லிருந்து வந்த கட்டளைக்குத் தாம் மாறு செய்ய இயலாதெனப் போக்குச் சொன்னார். அரசன் இந்திய வர்த்தகர்களைக் கற்பிட்டிக்கு வடக்கேயுள்ள துறை முகங்களில் வர்த்தகம் நடத்தும்படி அழைத்தான். இதற்கு இடர் செய்வதற்கும் ஒல்லாந்தார் கரையோரங்களிற் காவந்து செய்யும்படி ஓர் மரக்கலத்தை அனுப்பியிருந்தார். அரசன் தானாதிபதிகளை அனுப்பி முறையீடு செய்த போது பத்தாவியாக்கட்டளை யென்று சாட்டுக்கூறி மழுப்பிவிட்டனர்.

வேறு வழிகாணாத கண்டியரசன் தன் முன்னையோர் கைப்பற்றிய வழியையே கையாடிக் கறுவாப் பட்டை யுரிப்போரையும், கமஞ் செய்வோரையும், பலவகைத் தொண்டு புரிவோரையும் கலகத்துக்குக் கிளப்பி விட்டான். பட்டை யுரிப்போருக்குப் பல வகையான சகாயங்கள் செய்வதாக வாக்குப் பண்ணிய ஒல்லாந்தர் ஒருவித நன்மையும் செய்தாரல்லர். ஆகவே கலகம் மும்முரமாயிற்று. ஒல்லாந்தர் பொருள் பண்டங்கள் தகர்த்தெறியப் பட்டன. திசாதிபதிகள் தலைமையாய் நின்று கலகக் கருமங்களை நடாத்தினர்.

இவ்வேளை கஸ்தாவ் வில்லெம் பாரன்வான் இம்மாவ் 1736ல் ஒல்லாந்த தேசாதிபதியாக நியமிக்கப் பட்டான். இவன் தன்னாலியன்ற அளவு பணிந்து கொடுத்து அரசனுக்குப் பலவகையாலும் இச்சகம் பேசி ஒருவாறு சித்தியெய்தினானாயினும் ஒல்லாந்தருக் கும் அரசனுக்கு மிடையே ஏற்பட்ட பிணக்கு முற் றாய்த் தீர்ந்தபாடில்லை. உண்ணாட்டுக் கபாடங்கள் ஒல்லாந்தருக்கும் துறைமுகங்கள் அரசனுக்கும் மூடப் பட்டிருந்தன.

1738ல் நரேந்திர சிங்கன் மரணமானான்.

**பரீட்சை வினாக்கள்:—**

1. நரேந்திர சிங்கன் ஒல்லாந்தருடன் முரண் பட்ட வரலாற்றினைத் தருக.

2. ஒல்லாந்தர் அரசனுக்கு எவ்வாறு இடையூறு விளைத்தனர்?

# VI

# இலங்கை அரசர் பரம்பரையில் மாற்றம்

## மதுரை நாயக்க மன்னரின் வம்மிசத்தோர் அரசுக்கு வருதல்

## சிறி விசய இராசசிங்கன். 1739—1747

அன்று தொட்டு இலங்கை மன்னர்கள் பொதுவாகத் தங்கள் பாரிமாராகத் தென்னிந்திய இராசகுமாரிகளைத் தெரிந்து வந்தனர். தென்னிந்திய அரசகன்னிமாரை வதுவை செய்யும் பாரம்பரியம் இடையில் சிறிது காலம் நடைபெறுமலிருந்தது. இப்பழைய முறையினை மீட்டும் புதுப்பித்தவன் செனரதனே. இவன் தன் குமாரருக்கு மதுரை நாயக்க வம்மிசத்து அரச கன்னியரைப் பெற்று வதுவை செய்து கொடுத்தனன். விமலதரும சூரியன் முடித்த பெண் நாயக்கர் வம்மிசத்தவளே. அப்படியே நரேந்திர சிங்கனும் முடித்தான். இவன் ஒருத்திக்குப் பதிலாக சகோதரிகள் மூவரை வதுவை செய்தனன். நாயக்க வம்மிசத்து உதித்த பெரியோரும் சிறியோரும் ஒருவர் பின் ஒருவராக கண்டி அரச மாளிகையில் இருப்பிடம் தேடிக் கொண்டனர். இராச குமாரிகளின் அண்ணன் தம்பிமாரும் இங்கே வதிய லாயினர். இதுவரையும் ஆண் வழிவந்த அரசுரிமை பெண் வழி வரத்தொடங்

கியது. அரசனின் புத்திரர்க்குரிய அரசு இராணி யின் சகோதரர் வழி வரவேண்டுமென்ற புது அரசுரிமை நாயக்க வம்மிசம் இங்குவந்து அரச மாளிகையில் ஆதிக்கஞ் செலுத்தத் தொடங்கிய காலந் தொட்டு நடைமுறைக்கு வரலாயிற்று. தஞ்சாவூரி-லிருந்து வந்த நாயக்க வம்மிசத்தார் தங்கள் நயசுகத் திற்காகவே இம்முறையினை இங்கு புகுத்தினர்.

நரேந்திரசிங்கன் ஒருவருக்குமூவரை ஏககாலத்தில் மணம் புரிந்தும் புத்திரபாக்கியமின்றி இறந்தனன். அரச மாளிகையில் நாயக்கர் பலம் அதிகரித்திருந்தமையால் அரசனின் மனைவி சகோதரன் சிறிவிசய இராசசிங்கன் என்ற சிங்கள நாமந்தரித்துச் சிம்மாசம் ஏறினன். 1739—1747. இவன் அரசனுனதும் பிரசைகளை வசப் படுத்தும்படி புத்த சமயத்தைத் தழுவி சீய தேசத்துக் குருக்களை வருவிக்குமாறு பிரதிநிதிகளை யனுப்பினுன். நரேந்திரசிங்கனின் அனுசரணைக்குமாருகக் கத்தோலிக் கக் குருக்களைத் தனது நாட்டிலிருந்து போக்கினுன்.

அரசன் எவ்விதத்திலும் ஒல்லாந்தரோடு ஒத்து மேவப் பிரயத்தனித்தான் எனினும், இவன் இளக் கரத்தைக் கண்டு அவர்கள் கடு மிடுக்காய் நின்றனர். வான் இம்மாவ் தேசாதிபதி தன் மேலதிகாரிகளனு மதிப்படி எவ்விதத்திலும் அரசனுடன் இணங்காது முரண் செய்து வந்தான். அரசனும் வேறு வழி காணுது தனது நாட்டில் கறுவாப்பட்டை உரிக்கப் படாதென்றும் தனது நாட்டார் ஒல்லாந்தருடன் வர்த்தகஞ் செய்யப்படாதென்றும், ஒல்லாந்தர் தேவாலயங்கள் கட்டப்படாதென்றும் பிடிவாதம்

பண்ணினன். அரசன் முற்றும் தனது மணமாமனின் கைப்பம்பரம்போல் ஆடிநின்றான்.

சிறி விசய இராசசிங்கன் தனது சொற்பகால ஆட்சியை ஒல்லாந்தருக்கு மாறாக நடாத்தி 1747ல் இறந்தனன்.


**பரீட்சை வினுக்கள்:—**

1. நாயக்க வம்மிசம் இலங்கைக்கு வந்த வரலாற்றினைத் தருக.

2. அரசுரிமை எவ்வாறு நாயக்கர் வசமானது.




காலிக் கோட்டையின் வாசல்



ஒல்லாந்தர் கோட்டை—யாழ்ப்பாணம்



கண்டியர் பிரதானிகள்



மாத்துறையிலுள்ள நட்சத்திரக் கோட்டை

# VII

## கீர்த்தி சிறி இராசசிங்கன் 1747-1782

சிறிவிசய இராசசிங்கன் இறந்ததும் அவன் மணமைத்துனனான பதினைந்கு வயதுடை இளவலொருவன் கீர்த்தி சிறி இராசசிங்கன் என நாமந் தரித்து கண்டி அரசனானன். 1749-ல் இவன் நாட்டுக் கோட்டை சாமி நாயக்கர் மகளை வதுவை செய்தனன். இவன் வயதிற் சிறியவனாகவே பிரதானிகளிருவர் அரசியலை நடாத்தி வந்தனர்.

இவன் காலத்தில் சரணங்கரா என்ற நாமம் பூண்ட புத்தகுருவால் சமயம், மொழி, விருத்தியடைந்தன. 1750-ல் சீயத்திற்குச் சென்ற பிரதானிகளோடு புத்த குருமார் பலர் இங்கு வரலாயினர். இவர்களால் சரணங்கரா குருப்பட்ட அபிடேகம் செய்யப்பட்டனர். இவர் சமய ஒழுக்கமும் ஆசாரமும் நிறைந்தவராய் வைத்தியத்தில் கைதேர்ந்தவராய் விளங்கி 1778-ல் மரணமடைந்தனர்.

புத்தர்கள் வாழும் இத்தேசத்தில் நாயக்க அரசன் ஆள அவன் இனசனபந்துக்கள் இந்து ஆசார முறைப்படி ஒழுகல் தருமமா என்ற முறையில் சிங்களர் சிலர் கலகஞ் செய்ய அவர்களுக்குத் தலைமை வகித்த

மோலாதந்தே என்பாஜன கோபால் முதலியார் கொன்று சமாதானத்தை நிறுவினர்.

பெரகரா விழாக்களில் நாயக்க அரசர்கள் இந்து சமய சின்னங்களேயே வீதியிற் கொண்டு சென்றமையால் புத்தசமயத்தவர்கள் தமது சமயத்திற்கு அவமானமேற் பட்டதென முறையீடு செய்ததனிமித்தம் புத்ததந்தம் முதலிய சின்னங்களே உடன் கொண்டு செல்லும்படி அரசன் ஆஞ்ஞாபித்தான்.

சீயத்திருந்து வந்த குருமார் மகாவம்சம் என்ற நூலின் பிரதி ஒன்றினை இங்கு கொணர்ந்தனர். மகாவம்சம் அரச பரம்பரையைக் கூறுவது. இதுதாது சேனன் காலத்தில் எழுதப்பட்டது. மகா நாமன் என்னும் புத்த குருவே இதனை எழுதியவராவர். விசயராசன் முதல் மகாசேனன் வரையுமுள்ள சரித்திரமே இதன் கண்ணுள்ளது. இதில் 37 அதிகாரங்களுண்டு. பாலி மொழியில் பாடலாக எழுதப்பட்டது. இதன் தொடர்ச்சியே சூலுவம்சம். சூலுவம்சத்தின் முதற்பாகம் 42 அதிகாரங்களை யுடையதாய் சிறி மேகவண்ணன் காலந்தொட்டு பராக்கிரமவாகு பரியந்தமுள்ள அரசர்கள் வரலாற்றை யுடையதாய் விளங்குகின்றது. இதனை எழுதியவர் தருமகீர்த்தி என்ற புத்தகுரு என்பர். இவர் பாண்டிய மண்டலத்தைச் சேர்ந்தவர். அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர். இவரை ஆதரித்த இரண்டாம் பராக்கிரமவாகு 13-ம் நூற்றுண்டில் அரசு நடாத்தினன். சூலுவம்சத்தின் இரண்டாம் பாகம் விசயவாகு தொட்டு **IV**-ம் பராக்கிரமவாகு பரியந்தமுள்ள சரிதத்தைக் கூறுவது. இதனை

எழுதியவர் பெயர் தெரியவில்லை. இதன் மூன்றும் பாகத்தை கீர்த்தி சிறி இராசசிங்கன் எழுதுவித்தனன்.

மகாபராக்கிரமவாகுவைப் பின்பற்றி அரசியற்ற வேண்டு மென்பதே அரசனின் பேரவா. ஒல்லாந் தருடன் சருவி வெற்றிபெற விரும்பினன். மூத்து; குதிரை இவற்றை உதவுமாறு அரசன் வேண்டினன். அப்போதிருந்த ஒல்லாந்த தேசாதிபதியாகிய கொலாண்ஸ் (1743-1751) அரசன் கேட்டவை கொடுபட வேண்டுமேல், ஒல்லாந்தர் நாடுகளிலிருந்து கறுவாப்பட்டை உரிக்கும் தொழிலாளர் கண்டி நாட்டிற் சரண்புகுந்திருப்பதாயும் அவர்களை அனுப்பி வைததல் வேண்டுமெனக் கூறி நின்றனன். இதனை அரசன் அறவே மறுத்தனன். அப்பால் அரசன் யானைவர்த்தகத்தில் தனக்கோர் பாகத்திற்குரித் துண்டென வாதாடினன். இதுவும் மறுக்கப்பட லாயிற்று.

இவற்றின் பலனாக நாட்டிற் கலகங்கள் ஏற்பட்டன. கறுவாப்பட்டை உரிப்போர் இருதலைக் கொள்ளி எறும்புபோல் அரசனாலும் ஒல்லாந்தராலும் நெருக்கப் பட்டனர். வரிகள் பல அறவிடப்பட்டன. அநியாயங்க ளுக்காற்றாமல் மக்கள் மனுப்பண்ணியும் கவனித்த பாடில்லை. செறூடர் என்ற தேசாதிபதியால் (1757-1762) தென்னந் தோட்டங்களுக்கும் வரிவிதிக்கப் பட்டது. அரசினர் உத்தரவின்றிச் செய்யப்பட்ட தோட்டங்கள் விளைவில் அரைவாசியும், உத்தரவோடு செய்த தோட்டங்கள் மூன்றில் ஒன்றும் வரி இறுத்தல் வேண்டும். இறுக்கத் தவறுங்கால் அதன் பெறுமதி நாணயத்திற் கொடுபடல் வேண்டும் இதுவும் தவறின் காணிகள் விற்கப்படும். இவ்வாறு மக்கள் வதைக்கப் படவே அவர்கள் கலகத்திற் கெழுந்தனர். கலகத் தலைவர்களைப் பரதேச மனுப்பியும் மற்றையோரை வெகுவாய் உபத்திரவப் படுத்தியும் நெருக்கிடை

பண்ணி வந்தது ஒல்லாந்தர் படை. இத்தருணத்தில் கண்டி அரசனின் பிரபுக்கள், திசாதிபதிகள் சனங்களுக்கு ஒத்தாசையாக ஒல்லாந்தர்க்குத் துன்பம் விளைத்தனர். அரசனேடு இச்சமயம் யுத்தமே செய்வதில்லை யென்ற முடிவை விரதமாகக் கொண்டிருந்த ஒல்லாந்தர் கண்டிக்குப் படையெடுக்கத் தீர்மானித்தனர்.

கண்டியரசனும், இதுகண்டு யுத்தத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யலானுன். முதலில் துணை நாடினன். மதுரை நவாப்புக்குத் தூது போக்கினன். நவாப்பு துணை செய்ய இணங்கினனல்லன். இது காலத்தில் ஆங்கிலேயர் சென்னையில் ஆட்சியாளராயிருந்தனர். அன்றியும் ஆங்கிலேயரும் ஒல்லாந்தரும் சண்டை யொழித்துச் சமாதானமாயிருந்தனர். எனினும் ஆங்கிலேயர் கறுவா வியாபாரத்தில் ஆசை கொண்டிருந்தனர். அரசனுக்கும் துணையோ அத்தியாவசியகம். எனவே அரசனல் அனுப்பப்பட்ட தூதிற்கிசைந்து பைப்ஸ் என்பானை அரசனிடம் அனுப்பி வைத்தனர் ஆங்கிலேயர். பைப்ஸ் என்பான் 1762-ல் திரிகோணமலையிலிறங்கிக் கண்டி நாட்டுக்குச் சென்று நெடிது நேரம் அரசனுடன் கலந்துரையாடினன் எனினும் முடிவின்றிச் சென்னை திரும்பினன்.

இவற்றை யெல்லாங் கேள்வியுற்ற ஒல்லாந்தர் கண்டிக்குப் படையெடுத்தனர். இந்த நேரத்தில் ஒல்லாந்தர் தேசாதிபதியா யிருந்த வான் எக் என்பான் (1762-1765) மாத்துறையிற் கோட்டைகட்டியும் சிலாபம் புத்தளம் இவற்றை அடிப்படுத்தியும் யுத்தத்தில் ஒத்தாசையா யிருந்த மக்களுக்கு ஊழியம் விலக்கிக்

கண்டிக்குப் படையெடுத்தனன் (1764). இப்படையெடுப்பில் கண்டியரசனின் படையின் விசித்திர தந்திர முறைகளுக்காற்றாது பிரதிகூல மடைந்தனன் 1765-ல் மறுபடியும் கூடிய படையுடன் கண்டியை நோக்கிச் சென்றனன். அரசன் ஒளித்தோடத் தலைநகரைக் கைப்பற்றிச் சூறையாடியதுடன் நின்று விடாது இடித்துத் தகர்த்துப் பரிநாசஞ் செய்தனர். இதன் பின் ஒரு சிறு சேனையைக் கண்டியிலிருத்திக் கொழும்புக்குத் திரும்பினன். சில நாட்களால் அரசன் சேனை இவரை வளைந்து கொள்ளும் நேரத்தில் ஒல்லாந்தர் சேனை நாலா பக்கமும் சிதறுண்டு ஓடுகையில் பலர் சிறைபுண்டனர்; சிலர் கொழும்புக்குத் தப்பிபோடினர். இம்முடிவைக் காணச் சகிக்கலாற்றாது தேசாதிபதி வான் எக் மரணமடைந்தனன்.

புதிய ஒலலாந்த தேசாதிபதியாகிய வால்க் என்பான் யுத்தத்தாற் சாதிக்க முடியாததை அரச தந்திரத்தாற் சாதிக்க நினைத்தனன். அரசனின் பிரசைகள் இச்சண்டை காரணமாக வெகுவாய்ப் பாதிக்கப்பட்டனர். பயிர்பச்சை செய்து கொள்ள முடியவில்லை. ஒல்லாந்தர் எல்லைப்புறங்களில் அட்டகாசஞ் செய்தனர். இவற்றைக் கண்ட அரசன் சமாதானத்திற்கு இணங்கினன்.

1766-ல் இருபகுதியினரும் செய்து கொண்ட உடன் படிக்கையின்படி மாத்துறை, காலி, கொழும்பு, கற்பிட்டி, மன்னர், யாழ்ப்பாணம், திரிகோணமலை, மட்டக்களப்பு இவையாவும் ஒல்லாந்தர்க்கே யெனவும், இவ்விடங்களுக்குச் சுயாதீனமாகப் போக்குவரத்துச்

செய்யத் தக்க தாய்க் கரையோரமாய் ஒரு கீல நிலம் இலங்கையைச் சுற்றவர ஒல்லாந்தருக்கு விடப்பட வேண்டு மென்றும், அரசன் நாடுகளில் கறுவாப் பட்டை உரிக்கவும், வர்த்தகஞ் செய்யவும் சுதந்திர மளிக்கப்பட வேண்டுமென்றும் பொருத்தஞ் செய்யப் பட்டது. கரையோரமாக விடப்பட்ட கீலத்தரைக்காக ஒல்லாந்தர் வருடத்திற்கோர் குறித்த தொகை கட்டுதல் வேண்டு மென்றும் பொருந்திக் கொண்டனர்.

கீர்த்தி சிறி இராசசிங்கன் 1782-ல் இறந்தனன். வடிவால் அழகன் புத்திக் கூர்மையற்றவன். ஒல்லாந்தர் கண்டிக் கெதிராக எடுத்த ஒரேயொரு படையெடுப்பில் பிரதிகூல மடைந்தனரெனினும் அரசன் செய்த உடன்படிக்கை மிகவும் கேவலமானதே. ஆனல் இவன் காலத்தில் இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட சுலுவம்சம் எழுதப்படலாயிற்று.

**விசேட குறிப்பு:**

1. பெரகராவில் புத்ததந்தம் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டமை.
2. சுலுவம்சம் எழுதப்பட்டமை.
3. கண்டிக்கு ஒல்லாந்தர் படையெழுச்சி.
4. உடன்படிக்கை செய்தல்-1766.

**பரீட்சை வினுக்கள்:**

1. கீர்த்தி சிறி புத்தசமயத்திற்குச் செய்த தொண்டுகள் யாவை?

2. கீர்த்தி சிறிக்கும் ஒல்லாந்தருக்கு மிடையில் சச்சரவு ஏற்பட்டதேன்?

3. ஒல்லாந்தர் படையெழுச்சியின் வரலாற்றைத் தந்து முடிவிற் செய்த உடன்படிக்கையை விபரி.

---

# VIII

## ஒல்லாந்தரின் பரிபாலனமுறை. 1698—1796

ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை (1698—1796) அரசாண்டு தங்கள் ஆட்சியைச் செலுத்தி வந்தனர். தங்கள் நாட்டில் அனுசரிக்கப் பட்டு வந்த உரோமானிய ஒல்லாந்த சட்ட முறையினை இங்கும் நிலைநிறுத்தினர். யாழ்ப்பாணம் தவிர்ந்த மற்றைய இடங்களில் இவர்களின் சட்டமுறைகள் இன்றும் அனுசரிக்கப் படுகின்றன. யாழ்ப்பாணத்தில் தேசவழமை என்ற பாரம்பரியச் சட்ட முறை நிலவியது.

ஒல்லாந்தர் தங்கள் அரசு முறைமை, நீதி, பரிபாலனம் என்ற இருபிரிவை வகுத்து ஆட்சி நடாத்தலாயினர். நீதி முறையைச் செலுத்துவதற்காக

1. கொழும்பு
2. யாழ்ப்பாணம்
3. காலி

என்ற முப்பிரிவை வகுத்தனர். கொழும்புப் பகுதி வெங்தோட்டை ஆற்றினைத் தெற்கெல்லையாகவும் புத்தளத்திற்கப்பாலும் மன்னருக்கு இப்பாலும் உள்ள இடத்தினை வடக்கெல்லையாகவும் கொண்டுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதி வடக்கு, கிழக்குப் பகுதிகளை யடக்கியதாய் கும்புக்கன் ஆறு ஈறாய் அடக்கியுள்ளது.

காலிப் பகுதி கும்புக்கன் ஆறுதொடங்கி வெந் தோட்டை ஆறு ஈறாக அடக்கியுள்ளது.

உச்ச நீதிமன்றம் பத்தேவியாவிலுள்ளது. அப்பல் கோடு கொழும்பி லிருந்தது. பெரிய உத்தியோகப் பதவியிலுள்ளோருக்குரிய அப்பல் கோடு பத்தேவி யாவிலுள்ளதே. சகல குற்றச் சாட்டு வழக்குகளின் தீர்ப்பு தேசாதிபதியால் சபையாருடன் ஆலோசனை செய்து வேண்டிய திருத்தங்களுடன் அங்கீகரிக்கப்படும். ஆனல் சிவில் வழக்குகளைத் தேசாதிபதி தானகவே ஆலோசித்துத் தன் விருப்பத்துக் கிணங்கத் தீர்ப்புகள் அளிக்கலாம். இவ்வழக்கம் இமாம் உவில்லியம் வால்க் (1765—1785) என்ற தேசாதிபதியால் பத்தேவியாவி லுள்ளவர்களைத் தூண்டிப் பெற்றுக்கொண்ட மிகவும் மோசமான அதிகாரம்.

நீதி செலுத்தும் உரித்து அதற்கென நியமிக்கப் பட்ட உத்தியோகத்தரால் நடைபெறுவதில்லை. ஆங்காங்கு இருந்த உயர்தர உத்தியோகத்தரால் நடைபெற்று வந்தது. இவர்களுக்கு இவ் வேலைக்கு வேதனமேயில்லை. கொழும்பு, யாழ்ப்பாணம் காலி என்னு மிடங்களில் கோட்டு வீடுகளிருந்தன. திரிகோணமலையிலும் ஒரு சிறு கோடு இருந்தது. கொழும்பு நீதவான் எப்பொழுதும் ஒரு உயர்தர சிவில் உத்தியோகத்தரா யிருப்பர். மற்றைய இடங்களில் சேனதிபதி போன்றவர்கள் நியமிக்கப்படுவர்.

கோட்டு வேலைகளுக்கு உதவியாக பிசுக்கால் என்ற உத்தியோகத்தர் பத்தேவியா அதிகாரிகளால்

நியமிக்கப்படுவர். சகல கோட்டு நடவடிக்கைகளுக்கு இவரே பொறுப்பாளி. சிவில் வழக்குகளில் இவர் தீர்ப்புக் கொடுப்பதில் பங்கு பற்றலாம். ஆனல் குற்றச் சாட்டு வழக்குகளில் இவரே வழக்குத் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வழக்கை நடாத்துபவர். இன்னும், இராச கட்டளை, பொலிசார் மேற்பார்வை இவற்றிற்கும் பொறுப்பாயிருந்து சமாதான நீதவானுகவும் கடமை யாற்றுவர்.

சிவில் இருது என்ற சங்கமும் பட்டினப்பாக்கங் களிலிருந்து சிறுசிறு வழக்குகளை உடனுக்குடன் தீர்த்து வந்தன.

ஒல்லாந்தரின் ஆட்சிக்குள் சிங்களவர், மலையாளத் தார், முகமதியர், வேடர் என்ற சாதியினர் வாழ்ந்தனர். சிங்களவர் கொழும்பை யடுத்த கரையோரங்களிலும், மலையாளத்தார் யாழ்ப்பாணப் பகுதியிலும், முகமதியர் யாங்கணுஞ் செறிந்து கரையோரங்களிலும் வசித்தனர். பாணமை பசுறை முதலாமிடங்களை அடுத்த காடுகளில் வேடர் வசித்தனர்.

ஒல்லாந்த அரசாங்கம் தன் பரிபாலனத்தைச் செவ்வனே புரிவதற்காகத் தங்கள் பிரதேசத்தை ஆறு பிரிவாகப் பிரித்துக்கொண்டது.

I. கொழும்பு வெங்தோட்டை ஆறு தொடங்கி சிலாபம் ஈருகவுள்ள பகுதி. திசாவை என்ற உத்தியோகத்தனே பெரியவன்.

II. யாழ்ப்பாணம்: புத்தளம் — மன்னர் இடைப் பட்ட இடத்திலிருந்து கொக்கிளாய் மட்டும் உள்ள பகுதி. சேனைத் தளபதியே பிரதானி.

III. காலி: வெந்தோட்டை தொடங்கிக் கும்புக்கன் ஆறுவரையு முள்ள பகுதி. சேனைத் தளபதியே பிரதானி.

IV. திரிகோணமலை: கொக்கிளாய் தொடங்கி வெருகல் மட்டுமுள்ள பகுதி. தளபதியே பிரதானி.

V. மட்டக்களப்பு: வெருகல் தொடங்கி கும்புக் கனாறு ஈறுக. சிவில் உத்தியோகத்தர் தலைவரா யிருந்தனர்.

VI. கல்பிட்டியும் புத்தளமும்: சிலாபம் தொடங்கி மன்னார் ஈறுக. சிவில் உத்தியோகத்தரே தலைமையா யிருந்தார்.

இந்த ஆறு பகுதிகளும் பெரும் பிரிவுகளாயமைய அவை மேலும் சிறு சிறு பகுதிகள், கோறளைகள், பற்றுக்கள் என்ற பிரிவுகளாகப் பிரிந்து நிற்கப் பரிபாலனம் நடைபெறலாயிற்று. உதாரணமாகக் கொழும்புப் பிரிவு எட்டுக் கோறளைகளாகப் பிரிக்கப் பட்டு ஒவ்வோர் கோறளைக்கும் ஒவ்வோர் முதலியார் தலைமை உத்தியோகத்தரா யிருந்தனர். இந்த எட்டுக் கோறளைக்கும் மேற்பார்வையாளராகவும் தலைமையாக வும் திசாவை என வழங்கப்பட்ட சிவில் உத்தியோ கத்தர் நியமிக்கப் படுவர். இறைவரி சேர்ப்பதும், நீதி பரிபாலனஞ் செய்வதும் இவர்கள் கடமையாகும், அல்ட்ஸ்டோப் என்னுமிடத்தில் திசாவையின் கந்தோர் இருந்தது. இவருக்கு உதவியாகப் பல உத்தியோகத்த ரிருந்தனர். தீர்க்க முடியாத பெரும் வழக்குகளை

"நில இருது" என்ற சங்கம் கூடி ஆலோசித்துத் தீர்ப்புகள் அளித்து வந்தது. நிலம் சம்பந்தமான சிவில் வழக்குகளைத் தீர்த்து வைப்பதால் இப்பெயர் பெற்றது.

யாழ்ப்பாணம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டு ஊர் காவற்றுறை, பருத்தித் துறை, அப்பகுதி களின் தலைநகரங்களாக விருந்தன.

இவ்வாறே மற்றைய பகுதிகளும் பிரிபட்டு வன்னியர், முதலியார், முகாந்திரமார், கோறளைமார், விதானைமார், அத்துக்கோறளைமார், என்றவர்கள் போன்ற உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டனர்.

பரிபாலன முறையைப் பற்றிச் சொல்லுமிடத்து நில ஆட்சி உரிமை முறையைப் பற்றிக் கூறாது விடுதலாகாது. மானிய முறையில் நடாத்தப்படும் அரசு களில் நிலம் அரசனுக்கேயுரியது. மக்களுக்கு நிலம் ஏதேனும் பொருத்தனையின் பேரால் அது ஆண்டு அனுபவிக்கக் கொடுக்கப்பட்டதேயன்றிச் சொந்தமும் நிந்தமுமாக அளிக்கப் படுவதில்லை. இலங்கையிலும் இந்த முறையே, ஐரோப்பியர் இங்கு கால் வைக்கு முன் நடைமுறையிலிருந்தது. ஐரோப்பியர் இங்கு வந்ததும் நில ஆட்சி உரிமையில் மாற்றம் ஏற்படலா யிற்று. காணிகளை அரசாங்கம் மக்களுக்கு விற்கத் தொடங்கியது. சிலருக்கு நன்கொடையாக உதவியது. நிலத்தில் கொள்வனவு விற்பனை நடந்தது. ஆகவே காணிகள் மக்களுக்குச் சொந்தமும் நிந்தமுமாக முழு ஆட்சி உரித்துடன் வழங்கப்பட லாயிற்று. சில பரவணி நிலங்கள் கைமாறும் போது கிரயத்தின்

ஐந்து வீதம் அரசாங்கத்திற்குச் சேர்தல் வேண்டும். இந்நிலங்களின் விளைவின்பத்தி லொன்றை ஆயமாகக் கொடுத்தல் வேண்டும். நெல்லு, வெற்றிலை பாக்கு, தேங்காய், எண்ணெய் என்ற விளை பொருள் வகை யிலேயே ஆயம் செலுத்தலாம்.

பாரம்பரியமாக அரசு சேவை செய்தவர்களுக்கும் நிலம் சொந்தமாக அளிக்கப்பட்டது. இராச குடும்பத் தினருக்கும் இதே முறையில் நிலம் அளிக்கப்பட்டது.

வர்த்தக சங்கத்தாரால் சில சேவைகளின் காரண மாக அளிக்கப்பட்ட நிலத்தை விற்கவோ சுடவோ முடியாது. சந்ததி சந்ததியாக உரிமை போதல் வேண் டும். ஆண்வழி உரித்தில்லாத பட்சத்தில் அந்நிலம் மறுபடியும் அரசுக்காகும். இப்படி மாறின நிலமே பாழுகமம் * எனப்படும்.

இவ்வாறல்லாத நிலங்களை மக்கள் பயிரிட்டால் விளைபொருளின் அரைவாசியை அரசுக்கு அளித்தல் வேண்டும். இவ்வகை நிலத்தை 'ஆண்டே வெல்தனே' என்பர்.

'முத்தெட்டுச் சேனே' என வழங்கும் நிலங்கள் இலங்கையின் மேற்குப் பாகங்களில் சிங்களர் குடி யிருந்த பாங்கரிலிருந்தன. இவற்றில் பழவர்க்க மரங் களே யதிகமாக விருந்தன. விளை பொருளில் மூன் றில் ஒன்று, அல்லது அரைவாசி வரியாக அரசுக் கிறுத்தல் வேண்டும்.

---

* மட்டக்களப்பிலும் நுவரெலியாவிலும் பழுகமம் என்ற பெயர் தாங்கிய கிராமங்களுண்டு.

இவ்வகையாக நிலங்களின் சொத்துரிமை வரி வீதம் வித்தியாசப்படவே வழக்கு வாதங்கள் அதிக மாகக் கிளம்பின. இவற்றைத் தீர்த்து வைப்பதற்கே "நில இருது" என்ற கோடுகள் நியமிக்கப்படலாயின. இக்கோடு வாரத்துக்கு ஐந்து முறை கூடும்.

நீதி முறையும் நில உரிமையும் இவ்வாருக நடை பெற இறைவரி அறவிடும் முறையினை ஆராய்வோமாக இறைவரி பண்டமாகவேனும் பணமாகவேனும் இறுக்கப்படும். நெல் விளையும் நிலமெல்லாம் வரியை நெல்லாக அளித்தன. தோட்டங்கள் வரியைப் பணத் திற் செலுத்தின. பெரிய சாதிக்காரர் தாம் பயிரிடும் நிலங்களுக்கு வரி செலுத்திஞரல்லர். தலைவரி முறை நடைமுறையி லிருந்தது. இவ் வரி முறைகளெல்லாம் இடத்துக்கிடம் வித்தியாசமா யிருந்தன. வரி கொடாத பட்சத்தில் இராச காரிய வேலை செய்தல் வேண்டும்.

ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களிலும் மக்கள் வரி செலுத்தினர். உப்பு வரியும் நடைமுறையிலிருந்தது. வரிகளல்லாத வேறு வருமானங்களும் அரசுக்கிருந் தது.

கறுவா வியாபாரத்தில் வெகு லாபம் பெற்றனர். வருடத்திற்கு 50,000 இருத்தலுக்குக் குறையாமற் பெற்றனர். கறுவா வளரும் பெரும் பகுதிகளிலுள்ள திடகாத்திர முள்ள ஒவ்வொரு ஆடவனும் 682 இருத் தல் கறுவா சேகரம் பண்ணிக் கொடுத்தல் வேண்டும். இதற்குமேல் கறுவா கொடுத்தால் பணமளிக்கப் படுவர். கறுவாச் சேகரம் பண்ணுங் காலத்தில் அரிசி, உப்பு, மீன் இவை இலவசமாக அளிக்கப்படும்.

பாக்கு வியாபாரமும் பெரும் வரும்படியை அளித்தது. யானை வியாபாரம் மூலமும் நல்ல வருமானம் ஈட்டினர்.

இஃதிவ்வாறாக ஒல்லாந்தர் இலங்கைக் கரையோர மாகாணங்களைப் பரிபாலனம் பண்ணிப் பெருந் தொகையான பணம் சம்பாதித்தனர். வியாபார சங்கத்தாரும் பெருஞ் செல்வந்தராகவே ஒல்லாந்து தேசமும் முன்னேறியது.

# IX


# ஒல்லாந்த தேசாதிபதிகள். 1640—1796

## இவர்களின் ஆட்சி முறை


## சமூக சமய பண்பாட்டு அபிவிருத்திகள்

1658-ம் ஆண்டு தொடக்கம் 1796-ம் ஆண்டு வரையும் இலங்கையின் கரையோர மாகாணங்களை ஒல்லாந்தர் ஆட்சி புரிந்தனர். 1658-ம் ஆண்டிலேயே உண்மை அரசாட்சி தொடங்கின தெனினும் 1640-ம் ஆண்டில் ஒல்லாந்தர் இங்கு கால் வைத்தனர். அன்று தொடக்கம் 1796 வரையும் முப்பத்து மூன்று தேசாதிபதிகள் இங்கு கடமை யாற்றியுள்ளார். இவர்களுட் சிலரே முக்கியம் பெற்றவர்கள். போர்த்துக்கீச தளபதிகள் சேனதிபதிகள் போல் இவர்கள் கண்டி நாட்டுக்குப் படையெடுக்கவில்லை. இவர்கள் தங்கள் வியாபாரத்திலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள். அன்றியும் ஒல்லாந்த தேசாதிபதிகள் தங்கள் மேலதிகாரிகளிடும் கற்பனைகளுக்கிணங்க நடக்க வேண்டியவர்களு மானர்கள். பத்தாவியாவிலே மேலதிகார பீடமிருந்தது.


ஒல்லாந்த தேசாதிபதிகளுள் அறுவரே சரித்திரத்திற் குறிப்பிடத் தக்கவர்கள்.




ஒல்லாந்தராற் பிடிக்கப்பட்ட போர்த்துக்கீசர் கோட்டை—மட்டக்களப்பு




போர்த்துக்கீசர் உபயோகித்த வாள்கள்



ஒல்லாந்தர் தேவாலயம்—யாழ்ப்பாணம்



சுவாமி மலை—திரிகோணமலை



ஒல்லாந்தர் தேவாலயம்—யாழ்ப்பாணக் கோட்டை



நோக்ஸ் தங்கிய புளிய மரம்—மூதூர்

| | | |
|---|---|---|
| I. | கொஞ் நீலியு சுவாம் சிமோன் | 1703—1707 |
| II. | ஐசெக் இறம்பு | 1716—1723 |
| III. | பீற்றர் வைஸ்ற் | 1726—1729 |
| IV. | ஸ்ரீவானுஸ் வேர்சூலே | 1729—1732 |
| V. | வான் இம்மாவ் | 1736—1740 |
| VI. | வால்க் | 1765—1785 |

இவர்கள் ஆட்சிக்காலத்தில் இலங்கை சில நன்மையும் சொல்ல முடியாத சில தீமைகளும் அடைந்தது. நீதி பரிபாலனம் திறம்பட நடாத்தப்பட வேண்டுமென்பதே ஒல்லாந்தரின் பொது அபிப்பிராயம். அதனைச் சரிவரச் செய்தால் மற்றைய விடயங்கள் எல்லாம் சரிபோகும் என்பது அவர்கள் துணிபு. அன்றியும் யாழ்ப்பாணத்து மக்கள் பெருங்கோட்டுப் புலிகள் என்பதைத் தங்கள் முதல் ஐம்பது ஆண்டுகளுக்குள் அறிந்து கொண்டனர். பிடிவாதம் மிக்க யாழ்ப்பாணத்து மக்கள் நேரப்போக்கிற்காகக் கோட்டில் வழக்காடுவதைப் பெரும் புலாதியாக வைத்துக் கொண்டு வாழ்க்கை நடாத்துபவர்களாகக் காணப்பட்டனர். இவர்களுக்குப் புத்திமதி கூறி வழக்காடுவதைக் குறைக்கும்படி சொன்னால் ஒருபோதும் கேட்கவே மாட்டார்கள். போர்த்துக்கீசர் காலத்தில் முடிவு செய்த வழக்குகளைத் திரும்பவும் திறப்பர். ஒரு சேனாதிபதி தீர்த்து வைத்ததை மறு சேனாதிபதியின் நியமனத்தைத் தாயமாக்கிக்கொண்டு அவ் வழக்கை மறுபடியும் எடுக்குமாறு வேண்டுவர். 1707-ல் தொகுக்கப் பெற்ற தேச வழமையில் இதுபற்றி எழுதிய வரலாறு பின்னர் காட்டுதும்.

கோட்டுப் புத்தகங்கள் செவ்வனே பேணிக் காப்பாற்றப் படாமையாற் பல சோலி மாலிகளேற் பட்டன. சட்டங்கள் திட்டவட்டமாய் எழுதப்படாமை யால் தீர்ப்புகள் ஒழுங்கற்றவை ஆயின.

## கொர்நேலியூஸ் யோன் சீமோன்ஸ்

இவ்வித நீதாசன ஒழுங்கீனங்களைக் கண்டு பத்தேவியாவில் உயர் நீதி மன்ற உப நீதியரசரா யிருந்த கொர்நேலியூஸ் யோன் சீமோன்சைத் தேசாதிபதியாக்கினர். இவன் நேதர்லாந்து சர்வகலா சாலையில் சட்டப் பயிற்சி பெற்றவன். இவன் காலத் தில் (1703—1707) நெதர்லாந்து, பத்தாவியா என்னு மிடங்களிலிருந்து வந்த கட்டளைகள் கற்பனைகள் முறையாகப் பதிவு செய்யப்பட்டன. யாழ்ப்பாணத் தில் வழங்கும் தேச வழமைச் சட்டம் எழுதி வைக்கப் படலாயிற்று. எழுபத்திரண்டு கட்டளை முதலானவை களும் எழுதப்பட்டன. இவற்றை எடுத்துக் கூறும் நூலின் முகவுரையில் பின் வருமாறு எழுதப்பட்டுண்டு.

"இலங்கைத் தீவிலுள்ள யாழ்ப்பாண நாயன் பட்டினத்தில் நடந்துவருகிற வழமைகள். இவைகள் உலாந்தாக் கொம்பனியார் காலத்துத் தேச வழமை களுங் கட்டளைகளு மென்னப்படும். இந்தத் தேசத்தா ருடைய சென்மச் சுபாபமான வழமைகளின்படி நியாயத்தலங்களில் நீதி செலுத்தப்பட்டும் வருகின்றது. அவ் வழமைகளாவன முதுசொம், மஞ்சணீர், நன் கொடை, கொள்வனவு, விற்பனவு, காணிகள் தோட் டங்களை ஒற்றி வைத்தல், மீழுதல், அறுதிவிற்றல், முதலானவைகளாம். இவைகள் எல்லாவற்றையும்

கொழும்பில் உத்தம மகத்துவம் பொருந்திய எங்கள் தேசாதிபதியாகிய கொருநீலியு சுவாம் சீ மோ ன் (**Dr. Cornelis Joan Simons**) அவர்களும். அவ்விடத்திலுள்ள ஆலோசனைத் தலைவர்களும் இவ்விடத்துக்கு எழுதியனுப்பி வைத்த காகிதத்திலடங்கிய கட்டளைப் பிரகாரம் நான் இவ்விடத்தில் முப்பத்தைந்து வருடகாலமளவாக இத் தேசத்தாருடனே ஊடாடிச் சிரித்துப் பழகி அறிந்து கொண்டபடிக்குத் திரட்டி எழுதிக் கோவைப்படுத்தினேன்". நூலின் முடிவில்,

யாழ்ப்பாணத்துக் குடிசனங்களுக்குள்ளாகப் பழைய காலங்களிலே சீரித்து நடந்துவந்த தேச வழமையான காரியங்களை சீ. திசையுடையவர் கிலாசு ஈசாக்கிசு கடுதாசிப் படுத்தி எழுதியனுப்பியது.

என்றும் காணப்படுகிறது. கட்டளைகள் யாவும் வருடமொருமுறை பகிரங்கமாக வாசிக்கப்படும்.

சீ. திசையுடையவர் கிலாசு ஈசாக்கிசு (**Claas Isaaksy Disawa**) என்பவரால் எழுதப்பட்ட இத் தேச வழமைச் சட்டம் பன்னிரு தமிழ் முதலிமாராற் பரிசீலனை செய்யப்பட்டு 1707-ம் ஆண்டு மார்கழி மாதம் நிறைவேற்றப் பட்டது.

### ஐசெக் இறப்பு

அதிக இறைவரியை 1721-ம் ஆண்டில் சேர்த்துக் காட்டியவன் இவனே. இவன் காலத்தில் முத்துக் குளிப்பு நடந்தது. ஐந்து வருடத்திற்குத் தொடர்ந்து நடத்தினன். 1723-ல் இவன் காலத்தில் கறுவாப்

பட்டை உரிப்போராகிய சாலியர் கலகம் விளைத்தனர். 1723-ல் இறந்தனன்.

## பீற்றர் வைஸ்ற்

இவன் பத்தாவியாவிற் பிறந்து வளர்ந்தவன். முப்பதாண்டினனா யிருக்கும் போதே தேசாதிபதி யாக நியமிக்கப்பட்டான். இவன் காலம் சரித்திரத் தில் மிகவும் கேவலமானது. இவனோர் கொடுங் கோலன். கொலைப்படுத்துவதில் பின்னிற்க மாட் டான். மற்றும் உத்தியோகத்தருடன் ஓயாமற் சண்டை யிடுபவன். சித்திரவதை, கொலை இவற்றை அடிக்கடி செய்வித்தனன்.

பத்தேவியாவிற் பிறந்தானாயினும் தகப்பன் ஐரோப்பியன். ஒல்லாந்திற் கல்வி பயின்றவன். தனம் படைத்த மாதினை மணந்து கொண்டு பத்தே வியாவிற்கு வரவே அங்கு கொம்பனியாரின் சலுகை களை மனைவியின் இனசனத்தார் மூலம் பெற்றுப் பதவியில் உயர்ந்தனன். காலியில் வந்திறங்கிய போதே இச் சிறிய இடத்தை ஆளுதற்கு ஒரு கண் போதுமென்று சொல்லி மற்றதற்கு மூடியிட்டுக் கொண்டானும்.

சொலமனின் புத்திசாலித் தனம்
வைஸ்றின் ஆண்மைத் தனம்

இக் கூற்றினை அடிக்கடி கூறி ஆட்சி நடாத் தினன். இவனுக்கடுத்த பதவியில் காலியிலிருந்த சேனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்கினன். சதிகார ரெனக் குற்றஞ் சாட்டிப் போர் வீரரிற் பலரை வதைத்தனன். சித்திரவதை செய்து சாட்சியங்கள்

பெறுவன். தேகத்தில் ஆணிகளை அறைவித்து அவற்றின் துவாரங்களில், இரத்தவாறு பெருகிக் கொண்டிருக்கும் வேளையிலே உருக்கின மெழுகை வார்ப்பிப்பன். அரசியல் ஆலோசனைச் சங்கத்து அங்கத் தவர்கள் எல்லோரையும் நீக்கிவிட்டுத் தானே நீதிபதி யாகவும், வழக்காளியாகவும், தண்டனை நிறை வேற்றுபவனுகவும் காட்சியளித்தனன். நிரபராதி களான பத்தொன்பது பேர் நிட்டூரமாகச் சித்திர வதை செய்து கொல்லப்பட்டனர். முற்ற வெளியில் மரங்களிலே சிலர் தூக்கப்பட்டனர்; தூக்குமரங்களிற் சிலரும் கைகால்கள் முறிக்கப்பட்டுச் சிலரும், மானிட வர்க்கத்தால் கற்பனை செய்யமுடியாத வகைகளில் கொன்ருெழிக்கப்பட்டனர். கொலையுண்டாரில் மூன்று பேர் மிகவும் கொடூரமாக வாதிக்கப்பட்டனர். அவர் களின் எலும்புகள் முதலில் முறிக்கப்பட்டன; தசை கள் கிழிக்கப்பட்டன; கோடரி கொண்டு தலைகள் நொருக்கப்பட்டன; முண்டங்கள் பல தடைகளுக் கூடாக இழுக்கப்பட்டன; நொருங்குண்ட தலைகளை ஊசி முனைகளில் தொங்கவிட்டனன்.

படுபாதகனுய் விடுபேயனுய் கொடுமை புரிந்த இவனின் செய்திகள் பத்தேவியாவிலுள்ளார்க்கு எட்டவே, கொடுங்கோலனைச் சங்கிலியிற் பூட்டி யனுப்புமாறு புதிய தேசாதிபதியை இங்கு அனுப்பி னர். அங்கு அவன் சித்திரவதை செய்யப்பட்டிறந் தனன். இவனின் உடலை நாலாக வெட்டி எரித்துச் சாம்பலைக் கடலிற் கொட்டிவிட்டனர்.

கொழும்பிலே பெயிலி வீதியிலுள்ள ஓர் கட்டிடத் தில் ஓர் கல்லில்.

வலிமைகொண்டழிக்கப்பட்டது
உரிமைகொண்டு கட்டப்பட்டது

என்று அர்த்தம்

தருமுறையில் ஒல்லாந்த மொழியில் எழுதப்பட்டிருப்பதை இன்றுங் காணலாம். வைஸ்ற் இக்கட்டிடத்தை வலிமையினுல் இடித்தான். பின்னர் கட்டிட உரிமையாளர் தங்கள் உரிமையை நிலேநாட்டிக் கட்டினுர்கள் என்று சொல்லப்படுகிறது.

## ஸ்ரீவானுஸ் வேர்சூலே

வைஸ்ற் செய்த அட்டூழியங்களே யெல்லாம் நிவிர்த்தி செய்வதற்காக இவன் அனுப்பப்பட்டானெனினும் இவன் நிலேவரங்களேச் சமாளித்துக் கொள்ளமுடியாமற் தத்தளித்தான். மக்களேத் திருப்திப்படுத்தவும்முடியவில்லே;தன்மேலதிகாரிகளேயும் திருப்திப்படுத்தவும்முடியவில்லே. மேலும் இங்குள்ள உத்தியோகத்தர்களுடனும் சச்சரவிட்டுக் கொண்டான். 1726-ல் யாழ்ப்பாணத்தில் பெருவெள்ளப் பெருக்குக் காரணமாகப் பஞ்சமும் பட்டினியும் நோய் நொடிகளும் மக்களே வருத்த அவர்களும்அரசியலிற் குறை கூறினர். அரிசியின் விலேயும் ஏறியது. வேர்சூலே திருப்பி யழைக்கப் பட்டான். அரசியலே காலிச் சேனுதிபதிக்குக் கையளிக்குமாறு கட்டளே பிறந்தும் இவன் தன் எண்ணப்படி யாழ்ப்பாணச் சேனுதிபதிக்குக் கொடுத்துச் சென்றனன்.

## வான் இம்மாவ்

சிறி வீர நரேந்திர சிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் வெகு பிணக்கு ஏற்பட்டிருந்தபோதும் மக்கள்

கலகம் விளைவித்துக் கொண்டிருக்கும் போதும் இவன் தேசாதிபதியாக நியமிக்கப் பட்டான். கறுவாப் பட்டை உரிப்போரின் குழப்பம் எல்லைமீறி யிருந்தது. வான் இம்மாவ் வெகு தந்திரமாக இவற்றையெல்லாம் சமாளித்துக் கொண்டனன். கறுவாப்பட்டை உரிப் போரைச் சமாதானப் படுத்தினன். அரசனுக்கு வெகு மதிப் பொருள்களை அனுப்பி அரசனைத் தன் வசப்படுத் தினன்.

இவன் குண நடையிற் சிறந்தவன். இதாகிதந் தெரிந்து அநியாய வரிகளை ஒழித்து குடிதழீஇச் செங்கோலோச்சி வந்தமையால் இவனை யாவரும் மதித் துச் சங்கித்து வந்தனர். இவனரசியற் கருமங்களைச் செவ்வைப்படுத்தி எவரும் தம்மிட்டம் போற் இந்தியா விற்குச் சென்று வர்த்தகஞ் செய்து கொள்ளலா மென்று அனுமதி கொடுத்து ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களுக்குத் தீர்வை கொடுபட வேண்டுமென்று பிரமாணம் விதித்தான். இவனுடனே தான் இலங்கைத் துறைமுகவரி ஆரம்பமாயது. கமச்செய்கையை விருத்தி பண்ணினன். தென்னந் தோப்புகளை உண்டாக் கினன்.

இவன் காலத்திலேதான் 1737-ல் முதன் முறை யாக அச்சியந்திரம் இங்கு தாபிக்கப் படலாயிற்று. 1739-ல் தமிழ் சிங்கள எழுத்துக்களும் வார்க்கப் பட்டன.

### வால்க்

ஒல்லாந்தரின் கண்டிப்படை யெழுச்சியின் பின் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்தி

யவன் இவனே. 1736-ல் கொழும்பிலேயே பிறந்தவன். இவனின் தகப்பன் மலாக்காவில் தேசாதிபதியாக விருந்தவன். தாயோ சமாருங் நாட்டுப்பெண். மேலை நாட்டிற் கல்வி பயின்றவன். வடிவழகன். ஒல்லாந்தரால் அனுப்பப்பட்ட தேசாதிபதிகளுள் தலைசிறந்தவன் இவனே. நீர்கொழும்பை மகா ஓயாவுடன் இணைக்கும் வெட்டுவாய்க்கால் இவன் காலத்தில் 1771-ல் திறக்கப்பட்டது. 1769-ல் கொழும்பின் பாங்கரில் கறுவாமரங்கள் உண்டாக்கப்பட்டன. சாதிமதபேதம் இவன் காலத்தில் அதிகம் இடம் பெறவில்லை. கட்டுக்களக் குளத்தைத் திருத்த முயன்றனன். கைலஞ்சத்தை ஒழிக்கப் பெருமுயற்சிகள் எடுத்தனன். வாய்க்கவில்லை. ஊக்கங்காட்டி முயற்சி செய்த பலருக்கு வெகுமதிகள் அளித்து நாட்டுக்கு நலன் புரிந்த இவன் 1785ம் ஆண்டு மாசி மாதம் 5ந்உ நகலகமம் என்ற இடத்தினருகேயுள்ள மல்வத்தையிலமைந்த தனது மாளிகையில் இறந்தனன்.

## சமூக விருத்தி

ஒல்லாந்தர் காலத்தில் சமூகம் முன்னேறியதென்றே சொல்லுதல் வேண்டும். எல்லா அலுவல்களையும் ஒல்லாந்தர் பிரார்த்தனைகளுடன் தொடக்கினர். யாவரும் தம்தம் வேதத்தை அனுசரித்தல் வேண்டுமென வற்புறுத்தி நின்றனரேனும் இறப்பிறமாதுச் சமயத்தார்க்கு அதிகச் சலுகைகள் காட்டினர். உத்தியோக பதவிகளுக்கேற்கச் சொற்கள் கையாளப்பட்டன. தேசாதிபதியை "உத்தம கத்தன் வெகுவல்லபம்பொருந்திய" என்றழைத்தல் வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பதவியனரையும் அழைப்

பதற்கும் விளிப்பதற்கும் சொற்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. சொல்லும் பொழுதும் எழுதும் பொழுதும் இவை கவனிக்கப்படல் வேண்டும். இதனுல் மக்களின் பேச்சு வார்த்தைகள் திருத்த மடைந்தன.

மக்கள் விஞ்ஞான முறைகளை அறியத் தொடங்கினர். ஆகவே புராசீன வாழ்க்கையை மறந்து புது முறை வாழ்க்கையை விரும்பலாயினர். வீடுகள் வாசல்கள் திருத்தமடைந்தன. விருந்தைகள் யன்னல்கள் அமைந்த வீடுகள் கட்டப்பட்டன. கதிரைகள் மேசைகள் இவை வீடுகளில் இடம் பெற்றன. உடைகள் மாற்ற மடைந்தன. பிள்ளைகள் எட்டு மணிக்குப் பள்ளிக்குச் செல்வர். உத்தியோகத்தர்கள் ஏழு மணிக்கே கந்தோரிலிருப்பர். இதனுல் நேரகாலப் பழக்க வழக்கங்களேற்பட்டன.

ஒல்லாந்தர் வேலை வாங்குவதில் வீரர். நீதி செலுத்துவதிலும் பல முயற்சிகள் செய்தனர். ஒழுங்கான வாழ்க்கையை நடத்த உதவி செய்தனர். கலப்பு விவாகங்கள் பொதுவாகத் தவிர்க்கப்பட்டன. விவாக முறைகள், மரணச் சடங்குகள் இவற்றிலும் மாற்றங்களேற்பட்டன. மதுபானம் அருந்தும் வழக்கம் கூடியது.

வைத்திய சேவையில் முன்னேற்றம் ஏற்பட்டது. பல ஆசுப்பத்திரிகள் திறக்கப்பட்டன. இடாக்குத்தர்மார் பலர் சேவை புரிந்தனர். குட்டரோகம் கலப்பு விவாகத்தாற் பிறந்த பிள்ளைகளில் அதிகமாகக் காணப்பட்டது. 1708-ல் ஏந்தலையில் முதன் முதலாக குட்டரோக ஆசுப்பத்திரி கட்டப்பட்டது 1730-ல் நரேந்திர

சிங்கன் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருக்கும் போது மேல் நாட்டு வைத்திய முறையிற் கைதேர்ந்த இடாக்குத்தர் ஒருவர் கொழும்பிலிருந்து கண்டிக்கு அனுப்பப் பட்டார். சிறிவிசய இராசசிங்கன் நோய் தீர்ப்பதற்கும் 1739-ல் இன்னோர் இடாக்குத்தர் அனுப்பப்பட்டார் அநாதர் சாலைகள் பலவற்றைத் திறந்து பரிபாலித் தனர்.

## சமய விருத்தி.

இறப்பிறமாதுக் கிறித்துவம் இவர்கள் சமயம். (**Dutch Reformed Church**) இதனைப் பரப்பப் பல் வழியிலும் முயன்றனர். சமயத்தைப் பரப்புவதற்காக மாகாணங்களை கோயிற் பற்றுகளாகப் பிரித்தனர். சமய குரவர்கள் பாதிரிமாரெனப்படுவர். இவர்கள் பொதுவாக ஐரோப்பியரே. இவர்களுக்கு உதவியாகச் சட்டம்பியா ரும் ஆயுதாந்தியும் இருப்பர். இவர்களுக்குச் சங்கத்தார் சம்பளம் வழங்கினர். பாதிரிமாரைப் பயிற்றுவதற்கு கொழும்பிலோர் குருமடம் ஏற்படுத்தினர். உபதேசி மார், சட்டம்பியார், ஆயுதாந்தி இவர்கள் பிள்ளைகளுக் கும் பெரியோருக்கும் வேதோபதேசஞ்செய்வர். ஒல்லாந்தர் பொதுவாக மற்றைய சமயங்களை வெறுத் தனர். கத்தோலிக்கு சமயத்தை முற்றாக வெறுத்த னர். உத்தியோகங்களைப் பொதுவாகத் தங்கள் மதத் தினர்க்கே கொடுத்து வந்தனர். இவ்வாறு பல வழியில் முயன்றும் பலன் அதிகம் கிடைக்கவில்லை.

பாதிரிமார் கலியாணஞ் செய்தவர்களா யிருந்தார்கள். செபங்கள் வணக்கங்கள் மக்களின் மனதைக் கவருவதாயில்லை. பாதிரிமாருக்குச் சிங்களமோ தமிழ்

தெரியாது. சமயத்தைப் பரப்பவேண்டுமென்ற இவர்கள் ஆவேசத்தின் பயனுய் புத்த சமயம் கத்தோலிக்கு சமயம் இவை ஓர் மறுமலர்ச்சியுடன் பரவலாயிற்று.

ஒல்லாந்தர் தம் சமயத்தைப் பரப்பும் வகையில் முதன் முதலாக விடுத்த கட்டளை வருமாறு:

"முதலாவது இறப்பிறமாது வேதத்தின் சறுவேசுரனுடைய உண்மையான பணிவிடைகளில் இயன்ற மாத்திரம் உண்டாக்கிறதற்கும் துடர்ந்து நடப்பிக்கிறதற்குமாகக் கற்பிக்கும் வகையாவது கோயில்களிலே சகலமான சட்டம்புமாரும் அவர்களுக்கு இரண்டாம் பேரும் அயுதாந்தியா யிருக்கிற **(adjutant)** பேர்களும் கோயில்கள் பள்ளிக்கூடங்களுக் கடுத்த பணிவிடைகளிலே மிகுந்த விசுவாச பேராதரவுடனேயும் ஒழுக்கமான தன்மையுடனேயும் பராபரிக்கவும் நடப்பிக்கவும் மறுவிதங்களான பாடங்கள், உத்தரங்கள், வணக்கங்கள், வாசகங்கள், புத்தகங்கள், நடப்பிக்க ஒண்ணுதென்றும், குடியானவர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிலே குறைவில்லாதே வரப்பண்ணவும் அவர்களை நல்ல படிப்பினைவருத்தவும் பேணுதலான நினைவு கொண்டிருக்கும் படிக்கும் இது முகாந்தரமாக உண்டாக்கி யிருக்கப்பட்ட அறிவுகள் வணக்கங்கள், ஞாயிற்றுக் கிழமை தோறும் கட்டளையான கால நேரத்திலே சகல சனங்களுக்கு முன்பாக வாசித்து அறிவிக்கவும் இதற்கெதிரிடையாகத் தங்கள் பேரின் கடனை பணிவிடை நடப்பிக்க வில்லையென்று கண்ட பேர்களைத் தொழில் மாற்றி விடுகிறதறியவும்."

ஒல்லாந்தர் கத்தோலிக்கருக் கெதிராக வெகு நடவடிக்கைகள் எடுத்தனர். 1638-ல் கண்டி-

அரசனுடன் செய்த முதல் உடன்படிக்கையில் "கத்தோலிக்க குருமார் கண்டியரசன் நாட்டில் நடமாட விடுதலாகாது" என்று எழுதப் பட்டிருக்கிறதே. தங்கள் கரையோர மாகாணங்களிலும் கத்தோலிக்க குரவரை வெருட்டியடித்துத் துரத்தியும் கோயில்கள் பாடசாலைகள் இவற்றைக் கைப்பற்றியும், கிறித்த வர்களைத் தம் சமயம் புகுமாறு வற்புறுத்தியும், பிள்ளைகளைத் தம் பாடசாலைகளிற் சேர்த்தும், மண, மரணச்சடங்குகளை தம் சமய ஆசாரப்படி நடாத்தும் படியும் வலுகண்டஞ் செய்தனர். கத்தோலிக்கு குருவானவருக்கு யாரும் ஒதுக்கிடம் கொடுத்தலாகா தென்றும் அப்படிக் கொடுத்தால் மரண தண்டனையே யென்றும் பிரகடனஞ் செய்தனர். ஆகவே தான் இந்நாட்டில் 1687-ல் யோசேவ் வாஸ் சுவாமியார் இரகசியமாகக் கால் வைக்கும் வரையும் கத்தோலிக்கு குருமார் இருக்க வில்லையென அறிகிறோம்.

1687-ல் கத்தோலிக்கர் ஒருமுகப்பட்டுத் திரண்டு ஒல்லாந்தருக் கெதிராகச் சண்டை செய்ய முயன்றனர். நீர் கொழும்பு வாசிகள் மிகுந்த பரபரப்பை உண்டாக்கி விட்டனர். 1708-ல் முதலியார் அல்போன்சோ பெரீரு பெருங்கிளர்ச்சியை உண்டாக்கினர். 1715-ல் ஒல்லாந்தர் கண்டித நடபடிக்கைகளைக் கத்தோலிக்கருக்கு எதிராக வற்புறுத்தினர். 1744-ல் நீர் கொழும்புக் கத்தோலிக்கர் வெகு தைரியமான ஓலை யொன்றை ஒல்லாந்த தேசாதி பதிக்கு அனுப்பியிருந்தனர். இதிற் தாங்கள் பரம் பரையாகக் கத்தோலிக்க ரென்றும் தங்கள் சமயத்தை மறுதலிக்க மாட்டாரென்றும் உயிர் போனலும் ஒல்லாந்தரை எதிர்ப்பாரென்றும் எழுதி அனுப்பி

யுள்ளார். ஆனல் 1745-ல் வான் இம்மாவ் என்ற தேசாதிபதி சமய சுயாதீனம் வழங்கினன்.

## யோசேவ் வாஸ்.

இவர் இலங்கையில் 1687—1711 வரையும் கத்தோலிக்குக் குருவாகக் கடமை யாற்றியுள்ளார். இவர் கொங்கணி தேசத்துப் பிராமணர். தியான பத்திச் சபையைச் சேர்ந்த குருவானவர். கோவையிலிருந்து பிரயாணமாகி யாழ்பாணத்தில் 1687-ல் இறங்கினர். இவர் மாறுவேடம் பூண்டே ஒல்லாந்தரின் கட்டுக் காவலுக்கு அகப்படாமல் சாதாரண பிச்சைக்காரன் போல் உடைதரித்து வந்து தெல்லிப்பளையிற் தங்கினர். அங்கிருந்து தமது குருத்துவ கடமைகளை விசுவாசிகள் மத்தியில் இரகசியமாக நடாத்தி வந்தனர். ஒல்லாந்தரும் இதனை யறிந்தனர். நத்தார் இரவில் கிறித்தவர்கள் பலர் கூடியிருந்த பொழுது ஒல்லாந்த சேனதிபதி புகுந்து சிலரை மறியலாக்கினன். சுவாமியாரை அறிந்து கொள்ள முடியவில்லை அவனல், ஆகவே சுவாமியார் அங்கிருப்பது மோச மென்றெண்ணி கண்டியரசனை அண்டி வேதகடமை புரிய எண்ணங் கொண்டனர்.

கண்டியில் II-ம் விமலதரும சூரியனும் நரேந்திர சிங்கனும் சுவாமியாரை வெகுவாய் ஆதரித்து அவரின் கடமையைப் புரிய உதவியளித்தனர். இவர் நாடு நாடாகச் சென்று வேதோபதேசஞ் செய்து வந்தனர். இவருடன் சேர்ந்து உழைத்து வந்த மற்றச் சுவாமியாரே, யாக்கோமே கொன்சால்வெஸ். இவரைச் சாங்கோ பாங்கச் சுவாமியார் என்பர். இவர் அதிக

கத்தோலிக்க நூல்களைத் தமிழிலும் சிங்களத்திலும் எழுதியுள்ளார்.

யோசேவ் வாஸ் சுவாமியார் கண்டியில் வைசூரி கண்டபோது மக்களுக்குப் பேருதவி புரிந்து வந்தனர். 1711-ம் ஆண்டில் கண்டியிலே அவர் மரணமானுர்.

## பண்பாட்டு விருத்தி

மக்களின் பண்பாட்டு விருத்தியை அவர்களின் கல்வி முறைகளாலேயே கூறுதல் முடியும். இறப்பிறமாது வேதத்தில் மக்களைச் சேர்க்க வேண்டுமென்ற ஆசையால் உந்தப் பெற்ற ஒல்லாந்தர் இவ்வலுவலுக்கு உறுதுணையாகப் பாடசாலைகள் பலவற்றைத் திறந்தனர். போர்த்துக் கீசரைப் போல் இவர்களும் தங்கள் மதத்தைப் பாடசாலைகள் மூலம் பரப்ப எண்ணினர். போர்த்துக் கீசர் நடாத்திய பாடசாலைகள் யாவற்றையும் தமதாக்கினர். கல்வி கட்டாயமென்று சட்டமியற்றினர். பிள்ளைகளைச் சேர் விடாப்பிற் பதியும் போதே வேதப் பெயரை எழுதினர். பிள்ளைகள் எல்லோரையும் சமய ஆராதனைகளிற் பங்கு பற்றச் செய்தனர். இவ்வாருகச் சமயப்பிரசாரஞ் செய்தனர்.

மக்களுக்கு வேதோபதேசஞ் செய்வதற்குப் போதிய சுதேசிகளைப் பாதிரி மாராக்குவதற்குக் குரவர் பாடசாலை ஒன்றினை நிறுவினர். இங்கு இலாத்தீன், கிரேக்கம், எபுறா, கணிதம், ஆகிய பாடங்கள் படிப்பிக்கப் பட்டன. இங்கு படித்தவர்களிற் சிலர் ஒல்லாந்த தேசஞ் சென்று படித்தனர். இவ்வாறு மேற்படிக்கு

ஒல்லாந்து சென்றவர்களிருவர். உவில்லியம் யோர்கன் ஒந்தாச்சி, என்றீக்கஸ் பிலிப்ஸ் பண்டிதரத்தின. ஒல்லாந்து தேசம் செல்லாமலே வெகு கல்விமானாய்த் திகழ்ந்த இன்னொருவர் உளர். அவர் தான் பிலிப்பு தே மெல்லோ. இவர் அதிக நூல்களைத் தமிழில் எழுதி உள்ளார். இவரைப் பற்றிய விவரம் காசிச் செட்டி அவர்கள் எழுதிய புலவர் வரலாறு என்ற நூலிற் பார்க்கவும்.

பள்ளிக்கூடங்கள் திறத்தல் சட்டம்பிமாரின் தகைமைகள், படிப்பிக்கும் நேரம், படிப்பிக்கும் பாடங்கள் இவற்றைப் பற்றிய விதிகளையும் ஆக்கினர். வருடம் முழுவதும் பாடசாலை கூடும். சனிக்கிழமைகளிலும் பாடசாலை கூடியது. தவணைக்கொரு விடுதலை முறையில்லை. காலையில் 8-மணி தொடங்கி 11-மணி வரையும் மாலையில் 2-மணி தொடங்கி 5-மணி வரையும் பாடசாலை நடைபெறும்.

பாடசாலைகளைப் பராமரிக்க, பரிபாலிக்க ஓர்சபையிருந்தது. இச்சபையே ஆசிரியரை நியமிக்கும். அநாதைப் பிள்ளைகளுக்கும் கல்வி ஊட்டப் பட்டது. பதினெட்டு, இருபது வயதுகளுக்கிடையில் இவர்கள் பாடசாலையை விட்டு நீங்குவர். ஆண்களுக்குத் தகுதிக்கியைய உத்தியோகம் வழங்கினர்.

பாடங்கள் யாவும் தாய் மொழியிற் படிபிக்கப்படும். ஆசிரியர்களைப் பயிற்ற ஓர் பாடசாலை கொழும்பில் நிறுவப்பட்டது. அச்சியந்திரம் இங்கு நிறுவப்பட அது தமிழ் சிங்களப் புத்தகங்களை அச்சடித்து உதவியது. புதிய எற்பாடு மொழி பெயர்க்கப்பட்டு இங்கு அச்சேறியது. பல தமிழ் சிங்கள நூல்கள் தோன்றின.

## ஒல்லாந்த மொழி.

ஒல்லாந்தர் மொழி ஆங்கிலத்தைத் தழுவியதே. ஆங்கில எழுத்துக்களே அதன் எழுத்துக்களாம். இவர்கள் ஆட்சியால் தமிழில் பல சொற்கள் வந்து வழங்குகின்றன. கடதாசி விளையாட்டை இங்கு கொண்டு வந்தவர்கள் ஒல்லாந்தரே. அவ்விளையாட்டுடன் சம்பந்தப்பட்ட சொற்களெல்லாம் ஒல்லாந்த மொழியிலிருந்தே வந்தவை.

| | | |
|---|---|---|
| ஆடுத்தன் | அறுத்தாப்பு | கேத்தில் |
| உறாயித்தன் | கோக்கிசு | ஊக்கு |
| கலாவரை | தீச்சி | இருக்கை |
| இசுக்கோப்பன் | புடிச்சி | இலாச்சி |
| வீறு | படாமீன் | போத்தல் |
| மணல் | பொப்புரேச்சி | மோஎ் |
| ஆசு | வக்கர் | |
| ஏர் | போஞ்சி | |
| புறே | கோக்கி | |
| துரும்பு | கக்கூசு | |
| பூதல் | இசுத்தோப்பு | |
| வெந்தீசு | வாஸ | |
| நொத்தாரிசு | | |
| தொலுக்கு | | |
| சக்கிடுத்தார் | | |
| வங்குறோத்து | | |
| திறைசேரி | | |
| கர்தோர் | | |
| அப்பல் | | |
| பிசுக்கால் | | |

**பரீட்சை வினுக்கள் :—**

1. நாயக்க வம்மிச அரசர் தோன்றிய வரலாற்றினைத் தருக.

2. நொக்ஸ். இவரின் வரலாற்றினைத் தருக.

3. மேலைத் தேசத்தார் இலங்கையை நாடியதேன்? இரண்டாம் இராசசிங்கன் தொடர்பு வைத்த ஐரோப்பிய சாதியினர் யார்?

4. ஆங்கிலேயர் தூது பிரதிகூல மடைந்ததேன்?

5. ஒல்லாந்தரின் ஒற்றைப் படையெழுச்சியின் காரணங்களைக் கூறுக.

6. நாயக்க வம்மிசம் தலைகாட்ட முன்னிருந்த அரச வம்மிசத்தை பரதேனிய வம்மிசம் என்பானேன்?

7. நாயக்க அரசர்கள் புத்த சமயத் தொடர்புடையவர்கள். ஆதாரங் காட்டுக.

8. ஒல்லாந்தரின் ஆட்சி இலங்கையின் பொருளாதாரத்தை விருத்தியாக்கியதா?

9. **V. O. C.** என்ருல் என்ன?

10. இறப்பிற மாது வேதத்தை ஒல்லாந்தா எவவாறு பரப்பினர்.

11. ஒல்லாந்தரின் நீதிபரிபாலன முறையைத் தருக.

12. ஒல்லாந்த தேசாதிபதிகளிற் சிறந்தவன் யார். ஏன்?

13. நாயக்க வம்மிச அரசர் காலத்தில் புத்த சமயம் விருத்தியடைந்தது. ஆதாரங் காட்டுக?

14. பீற்றர் வைஸ்ற் கெட்டவன். நிரூபிக்குக.

15. ஒல்லாந்தர் இலங்கையில் விட்டுப் போனவை எவை?

16. ஒல்லாந்தர் நெருக்கடியிலும் கத்தோலிக்கு வேதம் நிலை நின்றது. காரணங் கூறி விளக்குக.

17. ஒல்லாந்தர் காலத்தில் சமூக சீர்திருத்த நிலையென்ன?

18. 1766-ல் செய்த உடன்படிக்கையின் விபரங்கள் யாவை?

19. போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் இவர்களின் ஆட்சி முறையில் எது சிறந்தது. ஏன்?

20. சிங்கள மன்னர்கள் விமரிசை யற்றவர்களான படியாற்றான் மறுபடியும் மறுபடியும் மாற்றார் கைகளிற் சிக்கிக் கொண்டனர். இதனை விளக்குக.

**கண்டி யரசர்கள் :—**

1635—1687 இராசசிங்கன் II
1687—1706 விமலதருமசூரியன் II

| | |
|---|---|
| 1706—1739 | வீரநரேந்திரசிங்கன். |
| 1739—1747 | சிறிவிசயஇராசசிங்கன். |
| 1747—1782 | கீர்த்திசிறி இராசசிங்கன் |
| 1782—1798 | இராசாதி இராசசிங்கன் |

**ஒல்லாந்த தேசாதிபதிகள்:—**

| | |
|---|---|
| 1640 | வில்லியம் ஜே. கோஸ்தர் |
| 1640—1646 | யான் தைசூன் பாயாட் |
| 1646—1650 | யோன் மற்சூக்கர் |
| 1650—1653 | யாக்கோபு வான் கிற்றின்ஸ்ரைன் |
| 1653—1660 | அதிரியான் வான் மைதென் |
| 1660—1661 | வன்கோவன்ஸ் |
| 1661—1663 | அதரியான் வான் மைதென் |
| 1663 | வான் கோவன்ஸ் |
| 1663—1664 | யேக்கப் அஸ்தாட் |
| 1664—1675 | வான் கோவன்ஸ் |
| 1675—1679 | றைக்குளோவ் வான் கோவன்ஸ் |
| 1679—1692 | உலோறன்ஸ் பைல் |
| 1692—1697 | தோமாஸ் வான் றீ |
| 1697—1703 | கெறிற் தே கீறி |
| 1703—1707 | கொரு நீலியு சுவாம் சீமோன் |
| 1707—1716 | ஏந்திரிக் பெக்கர் |
| 1716—1723 | ஐசாக் இறம்பு |
| 1723—1726 | யோவானிஸ் ஏர்டன்பேர்க்கு |
| 1726—1729 | பீற்றர் வைஸ்ற் |
| 1729—1732 | ஸ்ரீவானுஸ் வேர்சூலே |
| 1732—1734 | யேக்கப் கிறிஸ்ரியன் பைலத்து |
| 1734—1736 | வான் தொம்பேர்கு |

| | |
|---|---|
| 1736—1740 | வான் இம்மாவ் |
| 1740—1742 | புறை நின்கு |
| 1742—1743 | தானியேல் ஓவர்பீக்கு |
| 1743—1751 | வான் கொலன்சி |
| 1751—1752 | ஜெரூட் யோன் விறீலந்து |
| 1752—1757 | யோன் கீதியோன் லோத்தென் |
| 1757—1762 | யான் சுறூடர் |
| 1762—1765 | வான் எக் |
| 1765—1785 | வால்க் |
| 1785—1794 | வானதே கிரூவ் |
| 1794—1796 | வான் அஞ்சல்பேர்க்கு |

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை 1

## இலங்கைச் சரித்திரம்

[முதற் பகுதி]

**போர்த்துக்கீசர் காலம்**

**1505—1657**

184 பக்கங்கள். அழகிய கிளேஸ் பதிப்பு

*விலை ரூபாய் இரண்டு*

இடைக்குமிடம்:—

**கலைமகள் கம்பெனி**

கொழும்பு